பதிவு என் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா 0-1





| | ரூ. அ. |
|---|---|
| வருடசந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1-12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வரு வைகாசி-மீ 31-உ (13—6—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 7.



## உண்மையான கதர்!

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்)

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர்.

தமிழ்நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை காணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள் துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளைபீஸ்கள். ஷர்ட்டிங், கோட்டிங், சால்வை தினுசுகள். கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும், தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராமசாமி அய்யர்,
ராம விலாஸ் கதர் ஸ்டோர்ஸ், கரூர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ் ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால், கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

எஸ். ராமநாதன், காரியதரிசி, கத்தர் இலாகா

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும், வேறு பல சில் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும், எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதராஸ்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## என்ன பாவம் செய்ததோ?

பண்டிதர் நேருவின் சுயராஜ்யம் எப்படி இருக்குமென்பதை நாம் எடுத்துரைக்கவும் வேண்டுமோ? அவர் சுயராஜ்யம் எப்படியிருக்குமென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமாயின், அவர் வகுப்புப் பிணக்குகளைக் குறித்து "மெயில்" பத்திரிகையின் உலகபாத் நிருபரிடம் கூறியிருப்பவைகளை ஒவ்வொருவரும் ஊன்றிப் படித்தல் வேண்டும். வடக்கே வங்காளம், ஐக்கியமாகாணம், பாஞ்சாலம் முதலிய இடங்களில் இந்து-முஸ்லீம் பிணக்கு மிகுதியாவதையும், இப்பிணக்கால் கலகங்கள் நேருவதையும் நம் நண்பர்கள் அறிவார்கள். வடக்கே இந்து முஸ்லீம் பிணக்கு மிகுதியாதற்குச் சுயராஜ்யக் கட்சியாரும் ஒரு வகையில் பொறுப்புடையார் என்பதை எவரும் மறுக்கமுடியாது. வங்காளத்தில் முஸ்லீம் மந்திரிகளுக்குச் சம்பளமில்லாது செய்தவர்கள் யார்? மகமதியர்கள் நிரம்பிய வடமேற்கு மாகாணத்துக்குச் சீர்திருத்தம் கொடுக்க மறுத்த தேசபக்தர்கள் யார்? கல்கத்தா கார்ப்பொரேஷனில் டெபுடி மேயராய் இருக்கும் டாக்டர் சுக்ராவர்தியை நீக்க முயற்சி செய்பவர்கள் யார்? எல்லாம் சுயராஜ்யக் கட்சியாரே! இத்தகைய கொடிய சுயராஜ்யக் கட்சியின் தலைவரை வகுப்புப் பிணக்குகள் ஒழிவதற்கு என்ன செய்தல் வேண்டுமென்று கேட்டால் அவர்,

> "எந்த ஒரு பிரதேசத்திலாவது வகுப்புக் கலவரங்கள் நடந்ததாகத் தக்க அந்தஸ்துடன் கூடிய அதிகாரிகள் திடமாகத் தெரிவிக்கும் பட்சத்தில் அந்தப் பிரதேசத்திலுள்ள யாருக்கும், எந்தவிதமான கௌரவப்பட்டமும் சிபார்சு செய்யக் கூடா[illegible] தெளிவாக ஒருவிதி செய்துவிட [illegible] கலகப் பிரதேசத்தில் யாரையும் ஒரு [illegible] பிட்ட காலத்துக்குச் சர்க்கார் உத்தியோ[illegible]த்தில் எடுத்துக் கொள்ளக் கூடாதென்றும், ஏற்கனவே உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு சம்பளம் அல்லது அந்தஸ்து உயர்வு அளிக்கக் கூடாதென்றும் கண்டிப்பாக விதி செய்துவிட வேண்டும்.
>
> எலக்ஷன் விதிகளிலும் சில மாறுதல்கள் செய்துவிடலாம். அதாவது எந்த ஒரு அபேட்சகர் அல்லது காரியஸ்தராவது வகுப்புத் துவேஷத்தையும் குரோதத்தையும் குத்திவிட்டுத் தேர்தல் பிரசாரம் செய்தால், அவரைக் குற்றவாளியாகக் கருத வேண்டும்."

என்று விடை அளிக்கின்றார். ஆகவே நேருவின் உள்ளக்கிடை என்னவெனின், வகுப்புவாரிக் கலகங்கள் நடக்கும் இடத்தில் வாழும் எவருக்கும் அரசாங்கத்தார் பட்டம் கொடுக்கக் கூடாது; உத்தியோகம் கொடுக்கக் கூடாது; சம்பள உயர்வு கொடுக்கக் கூடாது என்பனவே. இவ்விதம் நேரு சொல்வதைக் காட்டிலும் கலகம் நேரும் இடத்தில் இருப்போர் எல்லோரையும் துப்பாக்கிகளால் சுட்டுக்கொன்று, அவர்கள் வீடு வாசல்களை யெல்லாம் நெருப்புக்கு இரையாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கலாம். சுயராஜ்யக் கட்சியின் கொடுமையாலோ அல்லது மதி வெறியாலோ, நூர் இடத்தில் கலகம் நேர்ந்தால் அந்நாட்டில் இருப்போரெல்லாம் தண்டிக்கப்பட வேண்டும் என்று நேரு சொல்லுதல் கொடிதினும் கொடிதாகும். இனி வரப்போகும் பண்டிதர் நேருவின் சுயராஜ்ஜியத்தில் இவ்வாறுதான் காரியங்கள் நடக்கும் போலும்!

இனி நேரு ஐக்கிய மாகாணப் பிராமணராதவின் பிராமண இராஜ்யமே என்றும் இந்தியாவில் நிலைபெறுதற்கு மற்றொரு வழி சொல்லுகிறார். யார் யார் வகுப்புவாரி இயக்கங்களின் சார்பாய்ச் சட்டசபைக்கு நிற்கின்றார்களோ, அவர்களைச் சட்டசபைக்கு நிற்க விடக்கூடாது என்கிறார். எனவே பண்டித நேருவின் எண்ணம் சட்டசபைக்குப் பிராமணரல்லாதாரும் முஸ்லீம்களும் ஆதிதிராவிடர்களும் வருதல் கூடாது, பிராமணர்கள் மட்டும் வருதல் வேண்டும் என்பனவாகும். நேருவின் சுயராஜ்யத்தில் பிராமணரல்லாதார் கட்சி இருக்க முடியாது; முஸ்லீம் லீக் இருக்கமுடியாது; ஆதி திராவிடர்கள் சங்கம் இருக்கமுடியாது; ஒரு சங்கம் மட்டுந்தான் இருக்க முடியும். அச்சங்கம் நேருக்களையும், மைலாப்பூர் ஐயங்கார்களையுந் தலைமையாய்க் கொண்ட சுயராஜ்யக் கட்சி என்ற திருட்டுப் பெயர் கொண்ட பிராமண சங்கமாய்த்தான் இருக்க முடியும். எனவே பண்டிதர் நேருவின் சுயராஜ்யம் பிராமணரல்லாதார், ஆதி திராவிடர்கள், முஸ்லீம்கள் முதலியோரை அடக்கியாளும் பிராமண ராஜ்யமாய் இருக்குமென்பது வெளிப்படை. அதனாற்றான் பண்டிதர் நேரு மலைக்குச் செல்லுங்கால் தம் ராஜ்யம் என்றும் பிராமண ராஜ்யமாய் இருக்க வேண்டுமென்று மைலாப்பூர் ஐயங்காருக்குப் பட்டம் சூட்டினர் போலும்! கலகங்களை அடக்குவதற்குப் பண்டிதர் பெரிய ஒட்வியராய் இருக்கின்றார். ஒட்வியர் இராஜ்யத்தில், கூட்டத்தில் இருந்தோர் மருந்துள்ளமட்டும் சுடப்பட்டனர். ஆனால் பண்டிதர் இராஜ்யத்திலே, ஊரில் உள்ளோர் எல்லோரும் சுடப்படுவர் போலும்! பண்டிதர் நேரு, மைலாப்பூர் ஐயங்கார் முதலியோரைத் தலைவர்கள் என்று சொல்லிக் கூத்தாட இந்தியா என்ன பாவந்தான் செய்ததோ!

"திராவிடன்."

## முஸ்லிம்களும் சுயராஜ்யக் கட்சி பத்திரிகைகளும்.

"படிக்கிறது பகவத்கீதை இடிக்கிறது குடக்கள்" என்னும் கதையாய் சுயராஜ்யக் கட்சியாரும் அவர்களது பத்திரிகைகளும் நடந்து வருகின்றன. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைப்பட வேண்டும், அதற்காகவே நாங்கள் பாடுபடுகிறோம், என வாய் வேதாந்தம் பேசி வரும் சுயராஜ்யக் கட்சியார், முஸ்லிம்களுக்கு மாறாய் நடந்து வருவதையும்; எல்லைப்புற மாகாண சீர்திருத்தத் தீர்மானத்தில் முஸ்லீம்களுக்கு விரோதமாய் நடந்து கொண்டதையும்; கல்கத்தா நகர டிப்டி மேயராக இருக்கும் ஜனாப் எச். எஸ். ஷுஹ்ரவர்தி என்னும் முஸ்லிம், சுயராஜ்யக் கட்சி அங்கத்தினராயிருந்தும் அவரை டிப்டி மேயர் பதவியினின்று விலக்க வேண்டுமென்ற கருத்துடன் மற்ற சுயராஜ்யக்கட்சி ஹிந்துக்கள் ஐரோப்பியர்களை துணைக்கு அழைத்துக்கொண்டு செய்துள்ள தீர்மானத்தையும், சுயராஜ்யக் கட்சி பத்திரிகைகள் முஸ்லிம்களை மாற்றாந்தாய்க் குழந்தைகளைப் போல் பாவித்து எழுதி வருவதையும் நாம் அறிவதைவிட முஸ்லிம்கள் நன்றாய் அறிவார்கள். நாட்டிலே வீறு கொண்டு முழங்கிய ஒத்துழையாமையை ஒடுக்குவதற்குத் தன்னால் ஏற்படுத்தப்பட்ட சுயராஜ்யக் கட்சியில் முகமதியர்களையும் சேர்த்து பலந்தேடிக் கொள்ளுவதற்காக [illegible]செய்த "கல்கத்தா பாக்ட்" என்[illegible] [illegible]து முஸ்லிம் ஒற்றுமையை உண்டாக்கியவரான தேசபந்து சித்தரஞ்சனதாசரால் தோற்றுவிக்கப்பட்ட "பார்வர்டு" பத்திரிகை இப்பொழுது ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு நேர்மாறாக எழுதி வருகின்றது. சமீபத்தில் நடந்த ஹிந்து-முஸ்லிம் கலவரத்தின் போது ஹிந்து-முஸ்லிம் கலவரத்தை வளர்க்கக்கூடிய விதமாய் (முஸ்லிம்களுக்கு விரோதமாய்) "பார்வர்டு" பத்திரிகை எழுதி வந்ததால், அப்பத்திரிகை மீது அரசாங்கத்தார் வழக்குத் தொடர்ந்து அதன் ஆசிரியரிடம் 500 ரூபாய்க்கு ஜாமீன் வாங்கியுள்ளார்கள்.

எனவே இவற்றினின்று விளங்கும் உண்மைதான் என்ன? இந்த சுயராஜ்யக் கட்சியாரால் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுமா? ஏற்படவே ஏற்படாது. இந்தக் கட்சியாரை நம்பி அவர்களுடன் சேர்ந்து உழைக்கும் முஸ்லிம்கள் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியோன் கதிக்கே வந்து சேருவார்கள்.

## "தேசோபகாரி" ஆசிரியர்.

"தேசோபகாரி" பத்திரிகை அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்டகைகளை தன் ஆசிரியராகக் கொண்டு நிலவுகிறது. சில மாதங்களுக்கு முன் அதன் ஆசிரியராக விருந்த திரு. கொ. நா. சுப்பையா நாயுடு அவர்கள் ராஜநிந்தனையான விஷயம் எழுதியதாகக் கைது செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டு இப்பொழுது சிறை வாசம் செய்து வருகிறார். இப்பொழுது திரு. சு. நா. சுந்தர முதலியார் அவர்கள் அபேஷவிதமான 124 A ஐ. பி. சி. பிரிவுப்படி குற்றஞ் சாட்டப்பட்டு இம்மாதம் 1-ந் உ ஒருவருட சிறைவாச் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். 1925-ம் ஸு மார்ச்சு மீ 26-ந் உ "இரட்டை ஆட்சி" என்ற தலைப்பின் கீழ் எழுதிய தலையங்கத்திற்காகவே இத்தண்டனை அடைந்தார். இவர் நீதி மன்றத்தில் எதிர் வழக்காடவில்லை.

திரு. சுந்தர முதலியார் இளைஞர். கவர்ச்சி பொருந்திய எழுதுகோலை யுடையவர். காந்தியத்தில் காதல் கொண்ட கட்டழகர். இவ்வுண்மை வீரருக்கு நாம் வாழ்த்துக் கூறுகிறோம்.

## முத்து ராஜாக்களின் மகாநாடு.

முத்து ராஜாக்களின் 19-ம் மகாநாடு திருச்சியிலாவது திருச்சியிருந்து துறையூருக்குப்போகும் வழியில் உள்ள பூனாம்பாளையத்திலாவது ஜூன் மாதம் ஸ்ரீமான் எம். ஆர். சேதுஇரத்தினம் ஐயரின் தலைமையில் நடைபெறும் என்றும், தேதி முதலியன பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் துண்டுப் பிரசுரம் வரப்பெற்றோம்.

முத்து ராஜா மகாநாட்டிற்கு தலைமை வகிக்க, "தேவடியாள்மகன்" "வேசி மகன்" என்று பொருள்படும் "சூத்திரன்" என்ற வார்த்தையால் தங்களை அழைக்கும் வகுப்பில்பிறந்த ஒருவரையா தெரிந்தெடுக்க வேண்டும்? தங்கள் வகுப்பில் பிறந்த அறிவாளர்களும் படிப்பாளர்களும் அம் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க யோக்கியதையுடையவரல்ல என்பது அம் மகாநாட்டைக் கூட்டுவோர் கருத்துபோலும்.

## பீளமேடு ஸ்ரீமான் கோவிந்தசாமி நாயுடு தர்மம்.

மேற்படி தர்மத்தின் கைத்தொழில் ஸ்தாபனத்திற்கு நாளது ஜூன் மாதம் 14-ந் உ. சென்னை கைத்தொழில் டைரக்டர் திவான் பஹதூர் சர். டி. விஜயராகவாச்சாரியாரால் பீளமேட்டில் அஸ்திவாரக்கல் நாட்டப்படுமென்று ஸ்ரீமான் என். வெங்கட்டசாமி நாயுடு தெரிவிக்கிறார்.

# பிராமணரல்லாதார் இயக்கத் தத்துவம்.

## தற்கால காங்கிரசால் பிராமணரல்லாதாருக்கு வந்த கெடுதி.

### பிராமணர் உத்தியோகம் பெற்றது காங்கிரஸ் வழியாகவே.

### "சமூகம் அழிவதை பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன்."

### கோயமுத்தூரில் ஸ்ரீமான்கள் ஆரியா, நாயக்கர் பிரசங்கம்.

ஸ்ரீமான் சுரேந்திரநாத் ஆரியா அவர்களின் கோயமுத்தூர் விஜயத்தை முன்னிட்டு கோயமுத்தூர் டவுன் ஹால் மைதானத்தில் தென் இந்திய நல உரிமை சங்கத்தின் சார்பாக ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரையும் வரும்படி தந்தி அனுப்பியதை முன்னிட்டு ஸ்ரீமான் நாயக்கர் அன்றைய கூட்டத்திற்கு வந்திருந்தார். அக்கூட்டத்திற்கு கோவை தனவந்தர்களும் உத்தியோகஸ்தர்களும் வியாபாரிகளும் தொழிலாளர்களும் மற்றும் காங்கிரஸ் பிரமுகர்கள் பிராமணர் பிராமணரல்லாதார் அடங்கிய சுமார் 2000 பேர்கள் வரை வந்திருந்தார்கள். சமீப காலத்தில் கோயமுத்தூரில் இவ்வளவு பெரிய கூட்டம் கூடினதில்லையென்றே சொல்லலாம். கோவை வக்கீல் ஸ்ரீமான் கே. ஈபன் அவர்களை அக்கிராசனராக பிரேரேபிக்கப்பட்டு சபையோரால் அங்கீகரிக்கப்பட்டு அவரின் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமான் ஆரியா பிராமணரல்லாதாரியக்கத்தத்துவம் என்பதைப்பற்றி ஒரு மணி நேரம் பேசினார். அவர் பேசியதின் சில பாகங்களை இங்கு குறிப்பிடுகிறோம்.

### திரு. ஆரியாவின் சொற்பொழிவு.

தமக்குத் தமிழில் நன்றாய்ப் பேசிப் பழக்கம் இல்லாவிட்டாலும் பெரும்பான்மையான ஜனங்களின் தாய் மொழியான தமிழிலேயே தமக்குத் தெரிந்தவரை பேசுவதாகவும் "பார்ப்பனரல்லாதாரியக்கத்தின் தத்துவம்" இன்னதென்று தெரிய வேண்டுமானால் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் சமூக விஷயங்களிலும், மத விஷயங்களிலும், தற்போதுள்ள, இராஜீய விஷயங்களிலும், தங்களுடையவும், தங்களுடைய ஜாதி அல்லது, பிரிவுகளினுடையவும் தற்கால நிலைமை எப்படியிருக்கிறதென்பதை நன்றாக எண்ணிப்பார்த்தால் தான் தெரியுமென்றும், அப்படி பார்க்கும்போது, எங்கும் அநீதியும் ஏற்றத்தாழ்வும் மோசடியுமே நிறைந்திருக்கிறதென்றும், அதற்கெல்லாம் காரணம் ஒரு சிறு சமூகத்தார் தங்களுடைய தந்திரத்தாலும், சுய வஞ்சகத்தாலும் பெரும்பான்மையான மக்களின் சுயமரியாதையையும், சுதந்திரத்தையும் அழித்து அவர்களை தாழ்ந்த நிலைமையிலேயே வைத்திருப்பதற்கு வேண்டிய புராணங்களையும், பழங் கதைகளையும் ஆதாரமாக்கிக்கொண்டு ஜாதியின் பேராலும், மதத்தின் பேராலும் அநேக குருட்டு நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கற்பித்துக்கொண்டும் வளர்த்துக்கொண்டும் நாட்டு மக்களுக்குள் ஒற்றுமையும் சுயமரியாதையும் ஏற்படா வண்ணம் செய்துவருகின்றனர், என்றும் இந்தச் சிறு தொகையினரின் கட்டுப்பாட்டினின்றும் விடுவித்து மக்கள் அனைவரும் பிறப்பினால் சமமானவர்கள் என்றும் சம உரிமை உடையவர்களென்றும் நிலை நாட்ட தொன்று தொட்டே புத்தர், கபீர்தாஸ், நானக், இராமமோஹன் முதலிய பல பெரியோர்கள் பாடுபட்டு வந்திருக்கின்றனரென்றும் காலஞ்சென்ற டாக்டர் நாயர் பெருமானும் சர் பி. தியாகராய செட்டியாரும் இவ்வுண்மையை உள்ளபடியுணர்ந்தே இந்த இயக்கத்தை ஏற்படுத்தினார்களென்றும், இவ்வியக்கத்தின் பலனாகத்தான் பார்ப்பனரல்லாத பெரு மக்களுக்குக் கண்விழிப்பு ஏற்பட்டதென்றும், ஜன நாயக இயக்கமான இவ்வியக்கம் வலிவுற்று வளர வளர்ந்தால்தான் தேசத்திற்கு விடுதலையும், எல்லோருக்கும் சுதந்திரமும், தன் மதிப்பும் கிடைக்குமென்றும், ஆனால் அவ்வாறு எல்லோரும் சுதந்திரமும் சுயமரியாதையும் அடைந்துவிட்டால் இதுவரை நம்மவர்களை ஏமாற்றி எல்லா சுகபோகங்களையும் தாங்களே அனுபவித்துக் கொண்டிருந்த பார்ப்பனருக்கு தங்கள் செல்வாக்குப்போய் விடுமென்ற பொறாமையும் பயமும் ஏற்பட்டு, நம்மனோர் இயக்கத்தை எவ்வாற்றானும் நசுக்கிவிட அவர்கள் பகீரதப் பிரயத்தினங்கள் செய்து வருகிறார்களென்றும் அந்தத் தத்துவத்தை உணராமல் நம்மவர்களிலேயே சில அறிவிலிகள், எதிரிகளின் தயவுக்குக் கட்டுப்பட்டோ அல்லது அவர்களின் பணத்திற்கு மோஹித்தோ, அல்லது அவர்களுடைய கோபத்திற்கும் சூழ்ச்சிக்கும் பயந்தோ நம்முடைய சத்திய சமத்துவ இயக்கத்தை யிகழ்ந்தும் பார்ப்பனரின் பாட்டிற்குத் தகுந்தபடி ஆடிக்கொண்டிருக்கிறார்களென்றும் இப்படி நம்மிற் சில கோடாரிக் காம்புகள் தலைவிரித்தாடுகிற தைரியத்தினால் தான் சத்தியமூர்த்தி, சீனிவாச ஐயங்கார் முதலான பார்ப்பனர்கள் தைரியமாய் நம்முடைய தலைவர்களை வாயில் வந்தபடி தூற்றி வருகிறார்களென்றும் நமது தலைவர்களை குறைகூறுவதற்குசென்னை வேளாளத் தெரு வாயாடி வம்பர் திரு. சத்தியமூர்த்திக்கு என்ன சுதந்திரமும் யோக்கியதையுமிருக்கிறதென்றும் அரசியல் இன்னதென்றே அறியாதவரும், பொய்யும் புளுகும் மெய்போல மூட்டை மூட்டையாய் அளக்கிறவரும் பொறாமையே ஒரு வடிவெடுத்தது போன்ற வருமான சத்திய மூர்த்தி நமது தலைவர்களை தூஷிக்க வேண்டிய அவசியமென்ன?

இந்தச் சந்தர்ப்பத்தில், ஒரு பார்ப்பனர் "குறிப்பிட்ட ஆசாமிகளைப்பற்றி பேசக்கூடாது" என்று சொல்லியும், அதையொட்டி மற்றொரு பிராமணர் "திட்டக்கூடாது" என்று கத்தியும் சிறிது குழப்பமுண்டாக்கப் பார்த்தனர். ஆனால் ஜனங்கள் அவர்களை அழுத்தமாய்க் கண்டித்தனர் இங்கு குறும்பு செய்தவர்களுக்குத் தகுந்த புத்தி கற்பிக்கப்படுமென்றும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டுப் பின்னும். சுயராஜ்யக் கட்சி வாயாடிகளைப்பற்றியும் அவர்கள் யோக்கியதையைப் பற்றியும் சிறிது கவனித்துப்பார்க்க வேண்டுமென்றும் கொள்கையிலாகட்டும் நடைமுறையிலாகட்டும் சுயராஜ்யக் கட்சி நமது இயக்கத்திற்குச் சிறிதும் கூடாதென்றும் சுயராஜ்யக் கட்சி ஒரு பெரும் மோசடியாகுமென்றும், நமது நாட்டிலுள்ள நமது சகோதரர்களைச் சமமாய் நடத்தப் பிரியமில்லாத பார்ப்பனர்கள் நமக்காகப் பாடுபட்டு சுயராஜ்யம் வாங்குவார்களென்பதை யார் நம்புவார்களென்றும் சமூகத்துறையிலும் இப்போதுள்ள செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்ளவும் தாங்களும் தங்கள் சந்ததியாரும் என்றைக்கும் பிறருடைய உழைப்பைக்கொண்டு வாழவேண்டுமென்பதற்காகவுமே பார்ப்பனர் எல்லோரும் சுயராஜ்யக்கட்சியென்று ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு நம்மையேமாற்றுகிறார்கள் என்றும் சுயராஜ்யக் கக்ஷியார் மாய வலையில் சிக்கிவிட்டால் பார்ப்பனரல்லாதார் இதுவரை அடைந்துள்ள சில சௌகரியங்களும் அற்றுப்போகுமென்றும் ஆகையால் வரப்போகும் தேர்தல்களில் வோட்டு செய்ய இஷ்டமுள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் பார்ப்பனரல்லாத கட்சிக்காரர்களுக்கே வோட் செய்யவேண்டுமென்றும் சொல்லி தனது ஆசனத்திலமர்ந்தார்.

### திரு. நாயக்கர் பிரசங்கம்.

சகோதரர்களே! இன்று கூட்டப்பட்ட கூட்டமானது பிராமணரல்லாதார் என்கிற ஒரு வகுப்பு சம்பந்தமான கூட்டம். இக்கூட்டத்தில் நான் இன்று பிராமணரல்லாதார் வகுப்பு முன்னேற்றம் என்கிற விஷயத்தைப்பற்றி பேசப்போகிறேன்.

### மாறுதல் வேண்டாதார் வகுப்பைப்பற்றி பேசலாமா?

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை காங்கிரஸ்காரன், அதிலும் வைதீக ஒத்துழையாதாரன், மாறுதல் வேண்டாதவன் என்று சொல்லப்பட்ட ஒருவன் வகுப்பைப் பற்றி பேசுவது பொருந்துமா என்று சிலருக்குத் தோன்றலாம். வைதீக ஒத்துழையாமைக்காரன் என்றால் ஒருவன் கழுத்தை ஒருவன் அறுக்கும்போது பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்பவனல்ல; ஒருவன் சொத்தை ஒருவன் கொள்ளை அடித்துக் கொண்டு போனால் வழியைத் திறந்துவிட்டு வாயை மூடிக் கொண்டிருக்கவேண்டுமென்பவனல்ல என்பதைமுதலில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அல்லாமலும் மகாத்மாவின் காங்கிரஸூம் அவரது ஒத்துழையாமையும் நிர்மாணத் திட்டமும் காங்கிரசிலிருந்து வெளிப்பட்டு மறைந்து கொண்டும் வருகிறது. நிர்மாணத் திட்டங் கொண்ட ஒத்துழையாமைக் காங்கிரசின் போது வகுப்பு விஷயத்தைப்பற்றி எவரும் யோசிக்கவேயில்லை. அதில் உயர்வு—தாழ்வு என்கிற வித்தியாசமே யில்லாமல் எல்லா வகுப்புக்கும் சமத்துவமும், சுயமரியாதையும் ஏழை பணக்காரர் என்கிற வித்தியாசமேயில்லாமல் எல்லோருக்கும் க்ஷேமமும், ஆங்கிலம் படித்தவன்-படியாதவன் என்கிற வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் சம யோக்கியதையும் உண்டாக சவுகரியமிருந்ததால் என் போன்றவர்கள் வகுப்பு என்பதை மறந்து மகாத்மா காங்கிரசிலும் ஒத்

ஒத்துழையாமையிலும் நிர்மாணத் திட்டத்திலும் உழைத்துவந்தோம்.

### ஒத்துழையாமைக்கு முன்னும் வகுப்பிற்கே உழைத்தேன்.

மகாத்மாகாங்கிரசுக்குமுன்பேநான்வகுப்பு முன்னேற்றத்தில் கவலை உள்ளவனாகத்தான் இருந்தேன். அதாவது பிராமணரல்லாதாருக்காக இப்பொழுது உள்ள தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பது போன்ற ஏறக்குறைய இதே கொள்கை உடைய சென்னை மாகாணச் சங்கம் என்கிற ஒரு சங்கம் இருந்ததும், அதில் என் போன்றவர்கள் முக்கிய பங்கெடுத்து உழைத்ததும் உங்களுக்குத் தெரியும். அது எதற்காக யிருந்தது? பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்கு காங்கிரஸ் போதாது என்றும் நமக்கென்று ஒரு தனியான இயக்கம் இருக்க வேண்டுமென்றும், இப்பொழுது காங்கிரசிலுள்ள பிராமணரல்லாதார் எல்லோரும் ஒன்று கூடித்தான் அச் சங்கத்தின் மூலம் பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்குழைத்ததும், நமது முன்னேற்றத்திற்காக வகுப்புவாரி பிரதிநிதித்துவம் முதலியவைகளை நாம்வலியுறுத்திவந்ததும் உங்களுக்குத் தெரியும்.

### காங்கிரஸினால் ஏற்பட்ட தீவினை.

இன்னும் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், நமது நாட்டில் காங்கிரஸ் என்கிற ஒரு இயக்கம் இல்லாவிட்டால் நமக்கு வகுப்பு முன்னேற்ற இயக்கமே தேவையில்லை என்றே சொல்லுவேன். நமது நாட்டில் என்று காங்கிரஸ் ஏற்பட்டதோ அன்றே பிராமணரல்லாதாருக்கு சனியன்பிடித்தது. உதாரணமாக தமிழ்நாட்டில் காங்கிரஸ் வருவதற்கு முன் பெரிய மனிதர்கள் என்போரும், படித்தவர்கள் என்போரும், தலைவர்கள் என்போரும், தேசபக்தர்கள் என்போரும் பிராமணரல்லாதார்களாகவேயிருந்தார்கள். ஜில்லா முன்சிப்புகள், சிரஸ்தார்கள், தாசில்தார்கள், இனிஸ்பெக்டர்கள் ஆகிய இவ்வுத்தியோகங்களைத்தான் அக் காலத்தில் இந்தியர்களுக்கு அதிகமாய் வழங்கப்பட்டன.

### காங்கிரஸுக்குமுன் உத்தியோகயோக்கியதை.

இவைகளில் நூற்றுக்கு 99-பேர் நாயுடு, முதலியார், பிள்ளை, சாயபு ஆகிய இவர்கள்தான் இருப்பார்கள். இவர்கள் உத்தியோக கண்ணியமும் தர்பாரும் இக்காலத்திலுள்ள ஒரு கலெக்டருக்காவது, நிர்வாக சபை மெம்பருக்காவது கிடையாது. எனக்குத் தெரிய ஒரு நாயுடு இந்த ஜில்லா சிரஸ்தாராயிருந்தார். அவரை "கலெக்டர் கூப்பிடுகிறார்" என்று யாராவது கூப்பிட்டால், "பத்து நிமிஷத்தில் வருகிறேன்" என்றுதான் சொல்லுவார். 15 நிமிஷம் கழித்து மெதுவாகப் போவார்; காலில் ஜோடும் ஒரு கையில் தடியும், மற்றொரு கையில் சுருட்டுமாய் மெதுவாக வருவார். கலெக்டர் முன்னால் மேஜையின்மேல் சுருட்டையும் தடியையும் வைத்து விட்டு "என்னைக் கூப்பிட்ட விஷயம் என்ன" என்று கேட்பார். காரியம் முடிந்ததும் சுருட்டும் தடியும் எடுத்துக்கொண்டு வருவார். போலீஸ் எட்குவார்ட்டர் இனிஸ்பெக்டராக ஒருவர் இருந்தார். அவர் கலெக்டர் சூப்பிரின்டெண்டு முதலிய வெள்ளைக்கார அதிகாரிகளுடன் சிநேகிதர்கள்போல் பேசுவார், உறவாடுவார். நாயுடுவை திடீரென்று கூப்பிடமுடியாது. நாயுடுவின் சந்தர்ப்பம் தெரிந்துதான் கூப்பிடவேண்டும். இது போலவே அக்காலத்தில் தக்க குடும்ப பரம்பரையும், யோக்கியமும், அந்தஸ்தும் கண்ணியமும் உள்ளவர்கள் பெரிய உத்தியோகம் வகிப்பார்கள் அப்போதைய உத்தியோகங்களுக்கு வேண்டிய யோக்கியதை இவைதான்.

### காங்கிரஸுக்குப்பின் உத்தியோக யோக்கியதை.

காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு உத்தியோகத்தின் யோக்கியதை அடியோடு மாறி விட்டது! முனிசிபாலிட்டி விளக்கு வெளிச்சத்தில் படித்தவனானாலும் சரி, பஞ்சாங்கம் சொல்லி பிச்சை யெடுத்தவன் மகனானாலும் சரி, தூது சென்று பிழைப்பவன் மகனானாலும் சரி, உருப் போடத்தெரிந்து கிராமபோன் மிஷின் போல பார்த்ததை உருப்போட்டு எழுதத்தெரிந்து, மற்ற விதத்தில் எப்படிப்பட்டவனானாலும் சரி, அவன் தான் உத்தியோகத்திற்கு லாயக்குள்ளவனாகப் போய் விட்டான். இதனால் தெருப்பிச்சை யெடுப்போரெல்லாம் உத்தியோகத்திற்கு லாயக்குள்ளவர்களாகி விட்டார்கள். பரம்பரையாய், பெருங் குடும்பமாய், தேசத்தையே கோட்டை கொத்தளங்களோடு அரசாண்டவர்களாய், சுய மரியாதையோடு வாழ்ந்தவர்களாய் உள்ள பிராமணரல்லாத குடும்பங்கள் பின்னடைய ஏற்பட்டு விட்டன. இதன் பலனாய் உத்தியோகங்களுக்கும் மதிப்பு குறைந்து விட்டன.

### பிராமணர் உத்தியோகம் பெற்ற வழி.

காங்கிரஸின் ஆதி சூழ்ச்சியே பிராமணர்கள் எப்படி உத்தியோகம் சம்பாதிப்பது என்கிற அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டதாகும். அதற்கு ஏற்றாப்போல் அந்த ஜாதிக்கு சுபாவமாய் உள்ள உருப்போடும் வித்தையையே உத்தியோகத்திற்கு யோக்கியதையாய் வைத்து, அதற்கேற்ற பள்ளிக்கூடங்களை விருத்தி செய்தார்கள். இதன் மூலம் உத்தியோகம் பெற்ற பிராமணர்களால் வெள்ளைக்காரர்களுக்குப் பல விதத்திலும் உபயோகமிருந்ததால் அவர்களும் இந்த பிராமணர்களுக்கு அநுகூலமான உத்தியோக யோக்கியதையையே பரப்பி விட்டார்கள். இப்போது வர வர மேற்படி உத்தியோகங்களின் யோக்கியதையும் குறைந்து விட்டது.

### பிராமண பிராமணரல்லாத உத்தியோகஸ்தர்களுக்குள்ள பேதம்.

பெரும்பாலும் வெள்ளைக்கார அதிகாரிகளுக்குள்ள சகல தேவைகளையும் நிறைவேற்றி வைக்கக் கூடியவர்களும், சுய மரியாதை அற்றவர்களும், மனச் சாக்ஷியை இழந்தவர்களும் தான் நல்ல டிப்டி கலெக்டர், நல்ல முன்சிபு, நல்ல தாசில்தார், நல்ல மேஜிஸ்ட்ரேட், நல்ல இன்ஸ்பெக்டர்களாய் விளங்குகிறார்கள். இந்த உத்தியோகத்திற்கே இவ்வளவு யோக்கியதை வேண்டுமானால் இன்னும் பெரிய உத்தியோகத்திற்கு எவ்வளவு யோக்கியதை வேண்டும்? இந்த முறையில் பிராமணரல்லாத வகுப்பார் உத்தியோகம் பெற அஞ்சுகிறார்கள். துணிந்து யாராவது ஒப்புக் கொண்டாலும் மேற்படி யோக்கியதையில்லாத காரணத்தால் நல்ல உத்தியோகஸ்தர்களாக ஆவதில்லை.

### தமிழரின் தாழ்வுக்கு காங்கிரஸே காரணம்.

இம்மாதிரி காங்கிரஸ் நமது நாட்டில் ஏற்படாமலிருந்தால் நமது ஜனங்களின் யோக்கியதை இவ்வளவு கேவலமாய்ப் போயிருக்காது; உத்தியோகங்களின் யோக்கியதையும் இவ்வளவு இழிவான நிலைமைக்கு வந்திருக்காது; வெள்ளைக்காரரும் இவ்வளவு கொடுமையான முறையில் ஆளத் துணிய மாட்டார்கள். ஆதலால் பிராமணரல்லாதார் நிலைமையை இவ்வளவு கேவலத்திற்குக் கொண்டு வந்து விட்டதற்கு முக்கிய காரணங்களில் இந்த காங்கிரஸும் பிரதானமானது. காங்கிரஸ் என்பதே உத்தியோகம் பெற ஏற்பட்டதுதான். அது நமது நாட்டு பிராமணர்களால் வளர்க்கப்பட்டு வந்ததால் பிராமணர்கள் உத்தியோகம் பெறத்தக்க வழியில் நிலை நின்று விட்டது. எந்த அந்தஸ்தும் எந்த உத்தியோகமும் எந்தப் பதவியும், எந்தப் பெரிய உத்தியோகஸ்தனையும் நீங்கள் எடுத்துக் கொண்டீர்களானால் அப்பதவியும் உத்தியோகமும் காங்கிரஸின் பலனாக ஏற்பட்டதாகத் தானிருக்கும்.

### தமிழர் முன்னேற தற்கால காங்கிரஸ் அழிய வேண்டும்.

இனி பிராமணரல்லாதார் சமூகத்திற்கு ஏதாவது யோக்கியதை உண்டாக வேண்டுமானால் இந்த காங்கிரஸ் ஒழிய வேண்டும். இது உள்ளவரை பிராமணரல்லாதார் உருப்படியாக முடியாது. மகாத்மா காங்கிரஸ் ஏற்பட வேண்டும்.

ஆனால் சிலர் என்னை இப்படிப்பட்ட காங்கிரஸில் நீ ஏன் இன்னமும் இருக்கிறாய் என்று கேட்கலாம். இப்பொழுது பிராமண உத்தியோகத்திற்கு உழைத்து வரும் காங்கிரஸை மகாத்மா காங்கிரஸ் போல் அதாவது இரண்டொரு வருஷத்திற்கு முன் மூன்று நான்கு வருஷகாலம் இருந்து வந்த காங்கிரஸைப் போல் சகல வகுப்பாருக்கும் சமமான நன்மை வரும்படியாக உண்மையான ஒத்துழையாமைக் காங்கிரஸாக மறுபடியும் மாற்ற வேண்டும் என்கிற ஒரு ஆசையால் தானேயல்லாமல் வேறல்ல. அப்படி மாறும் பக்ஷத்தில் இப்போதுள்ள சுயநலத்தலைவர்கள் மறைந்து விடுவார்கள். சிற்சில சமயங்களில் மகாத்மா பேசுவதைப் பார்த்தால் ஒரு சமயம் மறுபடியும் அந்த நிலைமைக்குப் பாடு படலாம் என்கிற நம்பிக்கை கொஞ்சங் கொஞ்சம் இருந்து வருகிறது.

அந்த நம்பிக்கை ஒழிந்துவிட்டால் காங்கிரஸில் நான் இருக்கமாட்டேன். ஆதலால் பிராமணரல்லாதார் வகுப்பு நன்மையைப் பற்றிப் பேசுவதும், காங்கிரசின் குற்றங்களை எடுத்துச் சொல்லுவதும் காங்கிரசிலிருப்பதற்கு யோக்கியதை குறைவாகாது.

### கூக்குரல் போடுவது யாருக்கு ஆபத்து?

தவிர ஸ்ரீமான் ஆரியா பேசும்போது சில

(இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க.)

# "நவசக்தி"-"தமிழ்நாடு" தலையங்கம்.

## திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் கருத்து.

பட்டம் பதவி விலக்க வேண்டும்.

எப்போதும் கதர் ஆடை உடுத்த வேண்டும்.

நியமனப் பதவிகளைத் துறக்க வேண்டும்.

"காங்கிரஸை ஒத்துழைப்புச் சேற்றில் அழுத்த ஒரு போதும் துணைபுரியேன்"

"நவ சக்தி" பத்திரிகையின் தலையங்கத்தில் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் எழுதுவது:—

காங்கரஸ் சுயராஜ்யக் கட்சிச் சார்பாக வரப்போகுஞ் சட்டசபைத் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்போர் பெயர்களைக்கண்ட அன்பர் சிலர் எனக்கு அந்தரங்கக்கடிதம் எழுதிய வண்ணமாயிருக்கிறார். கடிதம் எழுதினோர் எதிர் கட்சியிற் சேர்ந்தவருமல்லர், காரணமின்றிக் காங்கரஸைத் தூற்றுபவருமல்லர். அவ்வன்பர்களிற் சிலரை யான் நன்கு அறிவேன். அன்னார், வரப்போகுந் தேர்தலில் காங்கரஸுக்கு வெற்றி நிகழ வேண்டுமென்று இரவு பகல் தவங்கிடப்பவர். அந்நல்லோர் உரைகட்குச் செவிசாய்க்கவேண்டுவது எனது கடன்.

அவர்கள் விடுக்குங் கடிதங்களின் உள்ளுறையை அகழ்ந்து பார்த்தபோது சிறப்பாக இரண்டு பொருள் என் முன்னே மிளிர்கின்றன. ஒன்று பட்டத்தைப்பற்றியது; மற்றொன்று அரசாங்கத்தார் தயவால் நியமனம் பெறுவதைப்பற்றியது.

யான் சில திங்களாகத் தேர்தற்றொண்டில் தலைப்பட்டு உழைத்து வருவது தமிழ் நாட்டவர்க்குத் தெரியும். யான் எந்நோக்கோடு உழைத்து வருகிறேன் என்பதைக் கூட்டங்களில் விளக்கி வருகிறேன். சட்டசபையின் வாயிலாக நாட்டுக்கு நலன் விளையும் என்னும் எண்ணம் எனக்கு எப்பொழுதுங் கிடையாதென்பது நேயர்கட்குத் தெரியும். ஆனால் சட்டசபை நுழைவைப்பற்றி இப்பொழுது என் வலியுறுத்தி வருகிறேன் என்று சிலர் கடாவலாம்.

சட்டசபையை விலக்க வேண்டுமென்று காங்கரஸ் ஆணை தந்தபோது சிலர் நாட்டின் பெயரால் காங்கரஸ் ஆணைமீறிச் சட்டசபை நுழைந்தமையால், அதிகாரவர்க்கம் நாட்டில் காங்கரஸுக்குச் செல்வாக்கில்லை என்று இறுமாப்புக் கொள்ளலாயிற்று. அவ்விறுமாப்புக்குக் காரணம் நமது நாட்டவர் காங்கரஸ் ஆணையை மீறி நின்றமையேயாகும். இந்நிலையில் காங்கரஸ் என்செயல் வேண்டும்? தேசத்தில் காங்கரஸுக்குச் செல்வாக்குண்டு என்பதை எவ்வழியில் புலப்படுத்துவது? சட்டசபை முதலிய அமைப்புக்களைக் காங்கரஸ் பற்றாது பதினாயிரங் கூட்டங்கூடிப் பேசினாலும் காங்கரஸ் உண்மை நிலை புலனாகாது. காங்கரஸ் தேசத்தின் பிரதிநிதி சபை என்று நிறுவிக்காட்ட வேண்டுமேல், வாக்காளருள் பெரும்பான்மையோர் துணை தனக்குண்மையைக் காங்கரஸ் உலகுக் குணர்த்தல் வேண்டும். அதன்பொருட்டுக் காங்கரஸ் இப்பொழுது தேர்தலில் தலைப்பட்டு முயன்று வருகிறது. காங்கரஸை எதிர்க்குங் கட்சி என்றொரு கட்சியில்லா தொழியுமேல், காங்கரஸ் தன் கருத்தைச் சட்டசபை மீது செலுத்தாதென்பது ஒருதலை. எதிர்கட்சிகள் மிக உரமாக வீறு கொண்டு நிற்றலால் அவைகளையொடுக்க வேண்டிய கடமை காங்கரஸுக்கு ஏற்பட்டிருக்கிறது.

காங்கரஸ் கட்சியார் பெரும்பான்மையோர் சட்டசபையைப் பற்றிக் கொள்ளின், அதிகாரவர்க்கம் பணிந்துவரும். அது பணியாதொழியுமேல் நாட்டில் சட்ட மறுப்பு வரிகொடாமை முதலியன தொடங்குமாறு காங்கரஸ் ஆணைதரும். காங்கரஸ் சட்ட சபையைப்பற்றிப் பதவியேற்றலைத் தகைந்து இரட்டை ஆட்சியை வீழ்த்தவே முயன்று வருகிறது. சட்ட சபையைப் பற்றிப் பதவி யேற்க வேண்டுமென்னும் எண்ணம் காங்கரஸுக்கில்லை. இத்தகை ஒத்துழையாமையைக் காங்கரஸ் கொண்டுள்ளமையால், அதன் வழி நின்று பணியாற்ற யானும் ஒருப்பட்டேன். இவ்வொத்துழையாமை வாயிலாகப் பின்னை நாளடைவில் பழைய ஒத்துழையாமையைப் புதுக்கக்கூடும் என்பது எனது நம்பிக்கை. இதைப் பற்றிவிரித்துக்கூற வேண்டுவதில்லை.

பதவியேற்றலில்லை என்பது தியாகம் ஒத்துழையாமை முதலியவற்றை விளங்கச்செய்கிறது. ஆகவே காங்கரஸ் சார்பாக நிற்கும் அபேட்சகர் எத்தகையினராயிருத்தல் வேண்டும்? அவருள்ளத்தில் தியாகம் ஒத்துழையாமை முதலிய உரிமை வேட்கைக் குறிகள் மிடைந்து கிடத்தல்வேண்டும். இவை யுடையார், இல்லார், என்பதை அவரவர்புறச்செயல் அறிவிக்கும். காங்கரஸ் அபேட்சகர் அக நிலையை அளந்துகூறல் அரிது. அவரது புற ஒழுக்கங்கொண்டு அவரது நிலையை அளந்து கூறல் எளிது. ஆதலால் காங்கரஸ் அபேட்சகருள் சிலர் பட்டதாரிகளாயிருத்தல் கவனிக்கத்தக்கது. இதைக் குறித்தும், பிறவற்றைக் குறித்தும் அன்பர் சிலர் கடிதம் விடுக்கிறார். எனது உள்ளக் கிடக்கை என்ன என்று அவர் கேட்டார்.

எனது உள்ளக்கிடக்கையைப் புதிதாக ஈண்டுப் பொறித்துக் காட்டவேண்டுவதில்லை. எனது தலைமையின் கீழ்க் கூடிய காஞ்சி மகாநாட்டில் எனது முன்னுரையில் எனது உள்ளக்கிடக்கையை நாட்டார் முன்னிலையில் கிளத்தியிருக்கிறேன். சுயராஜ்யக் கட்சி இன்னின்ன நிபந்தனைக் குட்பட்டுக் காங்கரஸோடு ஒன்றல் வேண்டுமெனச் சிலமுறைகளை அம்மகா நாட்டில் குறிப்பிட்டேன். அவைகளுள் இறுதிக்கணுள்ள மூன்று முறைகளும் அன்பர்கள் ஐயத்தைக் களையும். அவை வருமாறு:—

> காங்கரஸில் சேரும் ஒவ்வொருவரும் என்றும் எவ்வேளையிலுங் கதர் தரித்தே தீரல் வேண்டும் என்னும் விதியிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட சில போழ்து கதர் தரித்தல் என்னும் விதி நீக்கப்படல் வேண்டும்.
>
> சட்டசபைத் தலைவர் பதவி வகித்தல், அரசாங்கத் தொடர் புடைய கூட்டங்களில் கலத்தல், பட்டமேற்றல், இன்னோரன்ன பிற விலக்கப்படல் வேண்டும். இப்பதவிகளேற்றுள்ள அன்பர்கள் உடனே அவைகளினின்றும் விலகிவிடல் வேண்டும்.
>
> தேர்தல் காலங்களில் நாட்டுக்குரிய அறநெறி கடைப்பிடித் தொழுகுதல் வேண்டும்.

இவைகளில் இன்னோரன்ன பிற என்னுங் குறிப்பால் அரசாங்கத்தார் தயவால் பெறும் நியமனம் அடங்குதல் காண்க. கதர் தரித்தல் பட்டமேற்றல் முதலியவற்றைப்பற்றி அன்று கொண்ட உறுதியினின்றும் எனதுள்ளம் இன்னுஞ் சிறிதும் பிறழவில்லை. ஆதலால் பட்டத்தைப் பற்றியும் பிறவற்றைப் பற்றியும் எனது உள்ளக் கிடக்கையை நேயர்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போல் உணர்வார்களாக.

காங்கரஸ் அபேட்சகராக, நிற்பவருள் சிலர் பட்டஞ் சுமப்பவராய் அரசாங்கத்தார் தயவால் சில அமைப்புக்களில் நியமனம் பெற்றவராயிருத்தலைக் குறித்து அன்பர்கள் வினவுகிறார்கள். அன்னார் காங்கரஸ் உறுதி மொழியில் கைச்சாத்திட்டதும் பட்டத்தையும் நியமனத்தையும் உதறித் தள்ளுவார் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஒருவரும் இதுகாறும் அவ்வாறு நிகழ்த்தியிருப்பதாகத் தெரியவில்லை. அச்சகோதரர்கள் உடனே தியாக உணர்வு கொண்டு பட்ட நியமனங்களை உதறி எறிவார்களாக. இல்லையேல் தமிழ் நாட்டுக் காங்கரஸ் தமிழ் நாட்டின நிலை நோக்கி இதைப் பற்றி உடனே ஏதாவது ஏற்பாடு செய்யுமென்று எதிர்பார்க்கிறேன்.


தமிழ் நாட்டுக் காங்கரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாச ஐயங்கார் சென்னை போந்ததும் பட்டந்தாங்கும் அபேட்சகர்களைப்பற்றிப் பேசவும் எண்ணியிருக்கிறேன். முடிவில் தமிழ் நாட்டுக் காங்கரஸ் காரிய கூட்டத்திலாதல் பொதுக் கூட்டத்திலாதல் பட்டம் நியமனம் முதலியவற்றைப்பற்றி ஒரு தீர்மானங் கொணரவும் நிச்சயித்திருக்கிறேன். ஒல்லும் வகை முயன்று பழைய ஒத்துழையாமை வழியில் காங்கரஸைச் செலுத்தத் துணை புரிவேனேயன்றிக் காங்கரசை ஒத்துழைப்புச் சேற்றில் அழுத்த ஒருபோதும் துணைபுரியேன் என்பதை நேயர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்நிலை நேருமா நேரும் என்று எண்ணாது நேராது நேராது என்று எண்ணியே உழைத்துவரல் வேண்டுமென்பது எனது கருத்து.

---

### "தமிழ்நாடு" பத்திரிகையின் தலையங்கம்:—

இந்துஸ்தானத்தில், பட்டங்களுக்கும், உத்தியோகங்களுக்கும் ஒரு காலத்தில் இருந்து வந்த மதிப்பு இப்பொழுது எங்கே போய்விட்டது. சர்க்கார் பொறுப்பற்றதா யிருக்கிறது என்பதைக் கண்ட பின்பு, அந்த சர்க்காரைப் பணியவைக்க வேண்டுமென்று முயற்சிசெய்கிற காலத்தில், ஜனங்களுக்கு விரோதமாய் சர்க்காருடன் சேருபவர்களுக்கே பட்டங்களும், பதவிகளுக்கும் அளிக்கப்படுவது வழக்கமாய் போய்விட்டது. ஆகவே பட்டம் பெற்றவர்களோ, பதவி பெற்றவர்களோ சர்க்கார் தாசர்கள் என்று ஜனங்கள் நினைப்பதில் அதிசயமொன்றுமில்லை. அந்தக் காரணத்தைக்கொண்டு தான், சுயராஜ்யம் பெற முயற்சிக்கும் எவரும் பட்டமோ, பதவியோ பெறக்கூடாதென்று ஜனங்கள் காங்கிரஸ் மூலம் சொல்லிவருகிறார்கள். உண்மையில் காங்கிரஸில் சேர்ந்து வேறு சுயநலமின்றி சுயராஜ்யத்திற்காக உழைப்பதென்று ஒருவர் தீர்மானித்துவிட்டால், பின்னால் பட்டங்களையோ, பதவிகளையோ அவர் கனவிலும் லட்சியஞ் செய்ய மாட்டார். அவைகளைத் துச்

(இதன் தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


# குடி அரசு.

அக்ஷய-ஹூ வைகாசி-மீ 31-உ


## ஞாஞேதயம்.

(உண்மை உணர்ச்சி.)

சென்ற வாரம் தலையங்கத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு விரோதமாய் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி லால்குடியில் செய்த பிரசங்கத்தை 37 பிரிவுகளாய்ப் பிரித்து அவற்றில் 12 பிரிவுகள் வரைக்கும் பதில் எழுதிவிட்டு மீதி 25 பிரிவுகளுக்கும் "நவசக்தி"க்கும் இவ்வாரம் பதிலெழுதுவதாயிருந்தோம். அல்லாமலும் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் கம்பெனியார் கோபிசெட்டிபாளையத்தில் நடத்திய 'ஓட்டு வேட்டை' நாடகத்தைப் பற்றியும் இவ்வாரம் எழுத நினைத்திருந்தோம். நாம் கொஞ்சமும் எதிர்பாராத விதமாய் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தனது 'நவசக்தி' தலையங்கத்தில் "பட்டம் கூடாது" என்கிற தலைப்பில் தனது கையொப்பத்துடன் எழுதியுள்ள விஷயமும் அதை அனுசரித்து ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் பத்திராதிபராய 'தமிழ் நாடு' பத்திரிகையின் தலையங்கத்தில் "பட்டவேட்டை" என்ற தலைப்பின்கீழ் எழுதியுள்ள விஷயமும் இவ்வாரத்தியமுக்கிய சம்பவமாகக் கருதி "நவசக்தி"க்கு பதில் எழுத வேண்டிய அவசியமில்லை என்று நினைத்து முன் குறிப்பிட்ட விஷயங்களை ஒத்தி வைத்து விட்டு இவற்றைப்பற்றி எழுதவேண்டிய அவசரமும் அவசியமும் வந்துவிட்டது. ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தமிழ் நாடு காங்கிரஸ் பொதுக்கூட்டத்திலோ, நிர்வாக கூட்டத்திலோ அடியில் கண்ட தீர்மானத்தைக் கொண்டுவர உறுதிகொண்டிருப்பதாய் அவரது பத்திரிகையில் காணக் கிடக்கின்றது. அதாவது:—

1. "காங்கிரசில் சேரும் ஒவ்வொருவரும் என்றும் எவ்வேளையிலும் கதர் தரித்தே தீரல் வேண்டும். குறிப்பிட்ட சில போழ்து கதர் தரித்தல் என்னும் விதி நீக்கப்படல் வேண்டும்.

2. சட்டசபைத் தலைவர் பதவி வகித்தல், அரசாங்கத் தொடர்புடைய கூட்டங்களில் கலத்தல் பட்டமேற்றல் இன்னோரன்னபிற விலக்கப்படல் வேண்டும்.

இப்பதவிகளேற்றுள்ள அன்பர்கள் உடனே அவைகளில் இருந்து விலகி விடல் வேண்டும்.

3. தேர்தல் காலங்களில் நாட்டுக்குரிய அறநெறி கடைபிடித்தொழுகுதல் வேண்டும்.

இன்னோரன்னபிற என்பது அரசாங்கத்தார் தயவால் பெறும் நியமனம்," ஆகிய இவைகள்.

இவற்றை ஸ்ரீமான் முதலியார் அவர்களால் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அக்கிராசனம் வகித்த திருவண்ணாமலை மாகாண மகா நாட்டிலும் ஸ்ரீமான் முதலியாரவர்களே அக்கிராசனம் வகித்த காஞ்சிபுரம் மாகாண மகாநாட்டிலும் வலியுறுத்தப்பட்டதை பொது ஜனங்கள் அறிவார்கள். ஆனால் இந் நிபந்தனைகள் இம்மாகாண மகாநாடுகளுக்கு அடுத்தடுத்து கூடிய காங்கிரஸ்களினால் நிராகரிக்கப்பட்டும் போயிற்று. ஆயினும் தமிழ் நாட்டு பிராமணர்கள் தங்கள் கட்சிக்கு ஆள் சேர்ப்பதற்காக மாகாண மகா நாடுகளில் ஒப்புக்கொள்ளுவதும் எல்லா இந்திய காங்கிரசில் தங்கள் செல்வாக்கைக்கொண்டு இவற்றை உதறித் தள்ளிவிடுவதுமாகவே நடந்து வந்திருக்கிறது. ஆனபோதிலும் இந்தக்கூட்டத்தார் ஸ்ரீமான் முதலியார் போன்றவர்களை தாங்கள் உபயோகித்துக்கொள்வதற்காகவே "உங்கள் இஷ்டப்படியே செய்யலாம்" "உங்கள் இஷ்டப்படியே செய்யலாம்" என்று ஆசை வார்த்தை சொல்லி அவர்களை ஏமாற்றி தங்கள் சுவாதீனப்படுத்தி வந்திருக்கிறார்கள். பலநாளைய திருடன் ஒருநாளைக்கு அகப்படுவான் என்பது போல் தமிழ் நாட்டின் சார்பாய் ஐயங்கார் கூட்டத்தாரால் ஸ்ரீமான்கள் நாயுடுகார் முதலியார் ஆகியவர்கள் பெயரால் சட்டசபைக்குப் பொருக்கி எடுத்த ஆள்களின் யோக்கியதையைப் பார்த்தவுடன் ஐயங்கார் கோஷ்டியின் தந்திரம் ஸ்ரீமான்கள் முதலியாரவர்களுக்கும் நாயுடு காருக்கும் ஞாஞேதயமாகி விட்டதென்றே சொல்லுவோம். இவர்கள் எவ்வளவுதான் சகித்துக்கொண்டு இன்னமும் பார்க்கலாம், இன்னமும் பார்க்கலாம் என்று பொறுமை காட்டி வந்தாலும் பிராமணர்களின் அளவுக்கு மீறிய சூழ்ச்சியானது ஸ்ரீமான் முதலியாரின் மனச்சாக்ஷியை வெல்லமுடியவில்லை. ஆதலால் இனி பொறுமை காட்டுவது தமிழ் மக்களுக்கு ஆபத்தாய் முடியும் என்பதை உணர்ந்து இப்போது ஸ்ரீமான்கள் முதலியாரவர்களுக்கும் நாயுடுகாருக்கும் ஐயங்கார் கூட்டத்தை இரண்டிலொன்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். அதாவது "சட்டசபையில் ஒத்துழையாமையா? சட்டசபையில் உத்தியோகமா? என்பது தான். இதன் பலனாய் நாயக்கரை காங்கிரஸ் நிர்வாக சபையை விட்டு வெளியேற்று முன்னமே ஸ்ரீமான்கள் முதலியாரும் நாயுடுகாருமே வெளியேற ஏற்படுமென்றே நினைக்கிறோம். அவ்வாறு நேரும் போது நாம் சபத முழு ஆதரவுடன் அவர்களைப் பின்பற்ற தயாராயிருக்கிறோம் ஏனெனில் ஐயங்கார் கோஷ்டியானது ஒருக்காலும் சட்டசபையில், முதலியார் கோரும், ஒத்துழையாமைக்குச் சம்மதிக்காது. ஐயங்கார் கோஷ்டி அகராதியில் ஒத்துழையாமைக்குப் பொருள் சட்டசபையில், பிராமணரல்லாத மந்திரிகளை விரட்டிவிட்டு, பிராமணமந்திரிகளோ அல்லது ஐயங்கார் சொல்லுகிறபடி ஆடுகிற மந்திரிகளோ அமர்ந்து பிராமணாதிக்கத்தை நிலைநிறுத்துவது தான் என்பது உலகமறிந்ததாகும். இப்போது ஸ்ரீமான்கள் முதலியார் அவர்கள் கோருவது போலும் நாயுடுகார் கோருவது போலும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியோ நிர்வாக சபையோ தீர்மானிக்குமானால் முதலாவதாக ஸ்ரீமான்கள் ராவ் பஹதூர் டி. எ. இராமலிங்கம் செட்டியார் அவர்களும் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் அவர்களும் காங்கிரசின் சார்பாய் நிற்க முடியாது. இருவரும் பட்டத்தையும் நியமனத்தையும் முறையே விட வேண்டியது தான். ஒரு சமயம் விட்டாலும் விடுவார்கள்; அல்லது பணம் செலவுசெய்யலாம் என்கிற தைரியத்தால் காங்கிரஸையே விட்டுவிட்டு, தனியாய் நின்றாலும் நிற்பார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், இவைகளாலேயே ஐயங்கார் கோஷ்டிக்கு ஸ்ரீமான்கள் முதலியார் நாயுடுகார் உபத்திரவம் தீர்ந்து போகாது என்றே தோன்றுகிறது. ஏனெனில் மாதம் 4,000 ரூபாய் வரும்படி உள்ள சட்டசபைத்தலைவர் உத்தியோகத்தையும் விட்டுவிடும்படி வேண்டுகிறார்கள். இதுமுடியவே முடியாது என்றுதான் நினைக்கிறோம்.

ஆதலால் இவ்வாரம் மிகுதியும் போற்றற்குரிய வாரமேயாகும். மற்றப் படி "குடி அரசு" பத்திரிகை ஸ்ரீமான்கள் முதலியார் நாயுடுகார் ஆகியவர்களைப்பற்றி, கொஞ்சமும் தயவு, தாக்ஷணியம், பழய விஸ்வாசம் என்பவைகளைக் கவனியாமல் தாக்கி எழுதிவந்ததை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அவை எதுவும் ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியார் அவர்களையும் டாக்டர் நாயுடுகாரையும் சொந்தத்தில் உத்தேசித்தல்ல வென்பதும், பட்டம் உத்தியோகம் பெறும் பிராமணர்களுக்கு அனுகூலமாய் இருக்கிறார்களே யென்று நினைத்தேயல்லாமல் வேறல்ல, என்பதையும் எல்லோரும் அறிந்திருப்பார்கள். முதலியாருக்கும், நாயுடுகாருக்கும் நாயக்கருக்கும் சொந்தத்தில் எவ்வித அபிப்பிராய பேதமோ சந்தேகமோ குரோதமோ விரோதமோ, உண்மையாய் இல்லை யென்றே சொல்லுவோம். ஆனால் பிராமணர்கள் போல் தங்கள் தங்கள் கொள்கையை கட்டி வைத்து தங்கள் சுயநலத்திற்கு ஒன்று கூடி ஒற்றுமையாய் வேலை செய்வதென்ற குணம் பிராமணரல்லாதாருக்குள் இல்லவே இல்லை.

உதாரணமாக ஸ்ரீமான்கள் சி. ராஜகோபாலாச்சாரியார், எஸ். சீனிவாசய்யங்கார், சர். சி. பி. ராமசாமி அய்யர் ஆகிய மூவரும் ராஜீய விஷயத்தில் ஒரே கொள்கையிலில்லை. ஆனால் தங்கள் சமூக சுயநல விஷயத்தில் மூவரும் ஒன்று சேர்ந்து உழைக்கிறார்கள். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் வைதீக ஒத்துழையாதார் என்று சொல்லிக்கொண்டு தன்னாலேயே "அயோக்கியன்" "துரோகி" என்று சொல்லப்பட்ட பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்க எவ்வளவு சூறன்,

எவ்வளவு நாடகம், எவ்வளவு சம்பாஷணை, எவ்வளவு சூழ்ச்சி, எவ்வளவு துரோகம் தன் மனசாட்சியை விற்று ஒத்துழையாமை தத்துவத்தால் அடைந்த பலனை உபயோகித்தல் முதலிய காரியங்கள் பாலும் பழமும் சாப்பிடுவதுபோல் செய்து வருகிறார். இந்தியாவிலுள்ள பிராமணர்களிலெல்லாம் பிராமணரல்லாதாருக்குக் கொடுமை செய்வதில் பண்டித மாளவியாவைவிட முன்னிற்கிறார். ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் எவ்வளவு பணம் செலவு செய்கிறார்? எத்தனை பேர் காலில் விழுகிறார். எத்தனை பேர்கள் தனக்கு அயோக்கியர் என்று தெரிந்தாலும் அவர்களுக்கு நல்வார்த்தை சொல்லி ஏமாற்றி அவருக்குப்பணம் கொடுத்து வேலை செய்கிறார். ஸ்ரீமான் சர் சி. பி. ராமசாமி அய்யர் ஷை இரண்டு அய்யங்கார்களுக்கும் முற்றும்மாறுபட்டவர். ஒருவருக்கொருவர் எவ்வளவோ குரோதத்தோடு இருந்தவர்கள். பிராமணர் நன்மை என்கிற விஷயத்தில் கொஞ்சமும் தங்கு தடையின்றி ஒருவருக்கொருவர் உள் ஆளாயிருந்துகொண்டு ஒருவரை ஒருவர் கைதூக்கிவிட்டு உத்தியோக விஷயத்திலும் எவ்வளவோ அனுகூலமாகவும், ஒற்றுமையாகவும், எவ்வளவோ காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறார்கள்.

பிராமணரல்லாதாரிலே, ஒரு நாயுடு ஒரு முதலியார் ஒரு நாயக்கர் ஆகிய மூவருக்குள் ஒருவருக் கொருவர் உத்தியோகப் போட்டியில்லை, தலைவர் போட்டியில்லை, வியாபாரப் போட்டியில்லை, சொந்த விரோதமில்லை, சந்தேகமில்லை, கொள்கையிலும் வித்தியாசமில்லை. ஆனால் மூன்று பேருக்கும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையில்லை; நாயக்கருக்கும் நாயுடுகாருக்கும் ஒற்றுமை யில்லை; நாயுடுகாருக்கும் முதலியாருக்கும் ஒற்றுமையில்லை; முதலியாருக்கும் நாயக்கருக்கும் ஒற்றுமை யில்லை. அய்யங்கார் கோஷ்டியார் இப்படிப் பிரித்து வைத்துவிட்டு நன்னிலத்தில் பேசும்போது "முதலியார் 'மாரீசன்', அவரைக் காங்கிரசைவிட்டு ஒழிக்கவேண்டும். சென்னையில் பேசும்போது நாயுடு மாறிவிட்டார். அவரை வெளியாக்கி காங்கிரசை பரிசுத்தப்படுத்தவேண்டும்". கோபியில் பேசும்போது நாயக்கரை இன்னமும் காங்கிரசில் வைத்திருக்கிறீர்களே, இது உங்களுக்கு தர்மமா என்று கேட்பதுமாயிருக்கிறார்கள். இதன் காரணமென்ன நமது கொள்கைகள் ஒன்றாயிருந்தாலும் நம்மைஒன்று சேரவிடாமல் பிரித்துவைத்து தனித்தனியாக சுலபமாய் கொன்றுவிடுவதற்கு செய்த சூழ்ச்சியல்லாமல் வேறென்ன.

கடைசியாக நாம் வாசகர்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்வதென்னவென்றால், ஸ்ரீமான் முதலியாரவர்களைப்பற்றி நாம் எழுதியதெல்லாம் ஸ்ரீமான் முதலியாருக்கு பிராமணர்களின் யோக்கியதை, தெரிந்திருந்தும் அவர்களைப்பற்றி நமக்குக்கூட தெரியாத பல விஷயங்களை நமக்கு சொல்லியிருந்தும் பின்னும் பின்னும் பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் பிராமணர்களுக்கு உதவி செய்கிறாரே, இதுகாங்கிரஸ் கொள்கையை பிரதானமாய் மதித்து காங்கிரசுக்கு பக்தி காட்டுவதன்மூலம் நடந்து கொள்ளுவதாயிருந்தாலும் அதுகுடியிருந்த வீட்டிற்கு நெருப்பு வைப்பதுபோன்ற பலனைக்கொடுக்கின்றதே என்கிற ஆத்திரத்தினாலேயே யல்லாமல் வேறல்ல. இப்போது அவர்கள் வெளியிட்டிருக்கும் கொள்கையும் அதையே கடைபிடிக்கப் போவதாய் குறிப்பிட்டிருக்கும் உறுதியும் நமது மனதைக் கவர்ந்து விட்டது. கொள்கை காரணமாகவே ஸ்ரீமான் முதலியார் அவர்களை நாம் தாக்க நேர்ந்ததும் நம்மை ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தாக்க நேர்ந்ததுமாகும் இப்போது இருவர் கொள்கையும் ஒன்றென்றே தெரிவதால் இனி ஒருவரை ஒருவர் தாக்க நேராது என்பதையும் வாசகர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நமது அய்யங்கார் கோஷ்டிக்கும் மற்றும் பார்ப்பன் கோஷ்டிக்கும் தென்னாட்டு காந்தியாய், உண்மை அந்தணராய், உத்தமப் பிராமணராய், தியாகமூர்த்தியாய் விளங்கிய ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் அவர்கள் இனி எப்படி தோன்றுவரோ அறியோம். ஒரு சமயம் 'சூத்திரராகவும்' 'தேசத் துரோகியாகவும்' தோன்றினாலும் தோன்றலாம். நாயக்கருக்கு ஒரு அண்ணனாகத் தோன்றினாலும் தோன்றலாம். யார் எப்படி நினைத்தாலும் பழைய ஒத்துழையாமையும் நிர்மாணத் திட்டமும் நாட்டில் அமலுக்கு வருங்காலத்தில் முதலியாரும் நாயுடுகாரும் நாயக்கரும் முன் போல ஒன்றுகூடி தங்கள் தங்களாலான கருமங்களைச் செய்ய கொஞ்சமும் அஞ்சமாட்டார்கள். அதுவரை கோயில் நெல்லுக்கு பெருச்சாளிகள் அடித்துக்கொள்வது போல் பிராமணர்கள் பிழைக்க, உத்தியோகம் சம்பாதிக்க, ஆக்கம் பெற நாம் ஒருவருக்கொருவர் காங்கிரசின் பெயரால் போட்டி போட்டு சண்டை போட்டுக்கொள்ளாமல் ஒற்றுமையுடன் சும்மா இருந்தால் அதுவே பிராமணரல்லாதாரின் நல்ல காலம் என்றே சொல்லுவோம்.

## ஒரு சேதி.

### திருவாரூர் திருத் தியாகராஜரின் திருத்தேர் திருத்தீக்கிரையாயிற்று.

தியாகராஜ பெருமானின் தேரானது 9—6—26ல் தீக்கிரையாயிற்று என்றசெய்தியைக் கேட்க இந்துக்களிற் பலர் மிகுதியும் துக்கப்படுவார்கள். ஆனால் நாம் அதை ஒரு நல்ல சேதியாகவே நினைக்கிறோம்.

தமிழ் நாட்டிலுள்ள எல்லா தேர்களையும் விடமிகப் பெரிய திருவாரூர் தேரேயாகும். இதை இழுத்துச்செல்ல குறைந்தது மூன்று நான்கு மாதங்களும் 5,000த்துக்குக்குறையாமல் பதினாயிரம் ஆட்கள் வேண்டும். இவர்கள் படிச் செலவும் சுமார் 20,000 ரூபாய்க்குக் குறையாதென்றே சொல்லலாம்.

தற்காலமுள்ள நிலைமையில் இவ்வளவு ஆர்ப்பாட்டம் எதற்கு? இதை நினைக்கும் போது ஒரு சிறுகதை நமது ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது:—

ஒரு குருவுக்கு நான்கு சிஷ்யர்கள் இருந்தார்கள் ஒரு நாள் குருவானவர் கடையில் ஊசி வாங்கிக்கொண்டு வரும்படி தன் நான்கு சிஷ்யர்களிடமும் கட்டளையிட்டார். அவர்கள் ஊசி வாங்கிய பிறகு நால்வரையும் வாங்கிவர கட்டளையிட்டிருக்க ஒருவர் மாத்திரம் இதை எடுத்துப் போனால் கோபித்துக்கொள்ளுவார் என்று ஒரு நீண்ட பனைமரத்துண்டில் ஊசியைக் குத்தி நால்வரும் வழிநெடுக இறக்கி இறக்கிச் சுமந்து சென்று குருவை அடைந்ததும் அவர் அறியும்படி தொப்பென்று போட்டு ஊசியைத் தேடி காணாமல் போகவே நடந்ததைச் சொன்னார்கள். குரு கோபித்துக்கொண்டு உங்களுக்குள்ள பங்கிச்சத்துருந்த புத்தியில்லையென்று சொல்லி, வேறொரு ஊசி வாங்கி பனைமரத்தோடு சேர்த்துக் கயிறுல் கட்டித் தூக்கிவரும்படி கட்டளையிட்டார். உடனே அவர்கள் இதனால் ஒரு நல்ல புத்தி கற்றுக்கொண்டதாக சந்தோஷித்து மறுபடியும் ஊசி வாங்க கடைக்குப்போகும் போது ஒருவன் குரு ஊசிக்குமாத்திரம் காசு கொடுத்தாரேயல்லாமல் கயிறு வாங்க காசுக்கு என்ன செய்கிறது என்று கேட்க மற்றவர்கள் "தோஷம், தோஷம், இதெல்லாம் நினைக்கவே கூடாது. நினைப்பது குருத்துரோகமாகும்" என்று சொல்லி நினைத்ததற்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டார்கள்.

அதே போலிருக்கிறது திருவாரூர் தேரில் சுவாமியை வைத்து இழுக்கும் கதை. தேசம் வறுமைப் பிணியால் வதைபுற்று கல்வியற்று சிறுமைச் செயலால் சீரழிந்து இருக்கும் இது காலை 2000 வேலி நிலமுள்ள தியாகராஜ சுவாமிகளின் தேர் உற்சவத்திற்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு தொழிலாலயங்களும் கல்லூரிகளும் அமைத்து வறுமைப் பிணியால் வாடும் மக்களுக்கு வேலை கொடுத்து போஷித்தும், கல்வி போதித்து சன்மார்க்க போதம் புரிந்துவர பிரயோஜனப் படுத்தலாகாதோ?

---

## ஜனுப் யாகூப் ஹாசன் சேட்.

ஒத்துழையாமை இயக்கத்தின் போதும் கிலாபத் இயகத்தின் போதும் சிறை சென்ற முப்பத்தையாயிரம் பேர்களுள் ஜனுப் யாகூப் ஹாசன் சேட் ஒருவர். இவ்வாறு இவர் செய்த சிறை வாசமானது சட்டப்படி சட்டசபைகளுக்கு இவர் அபேக்ஷகராய் நிற்கயோக்கியதை இல்லாதவராக்கிவிட்டது. இக்குறையை நீக்க சென்னை அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்து கொண்டு சட்ட மெம்பர் சர். சி. பி. இராமசாமி அய்யரையும் சென்னை கவர்னரையும் நேரில் பார்த்தும் பிரயோஜனம் ஏற்படவில்லை.

ஜனுப் சேட் அவர்கள் பிறவியிலேயே மிதவாதி. கிலாபத் அநீதி இல்லாதிருந்தால் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தேயிருக்கமாட்டார்.

இவர் ஒத்துழையாமையில் சேர்ந்தபிறகு சுயராஜ்யக் கட்சியில் சேரவேகிடையாது. அக்கட்சியை ஆதரிக்கவுமில்லை. இக்காரணம் ஒன்று தான் அவரை சட்டசபைக்கு அருகதையில்லாமல் செய்து விட்டதாக "சுதேசமித்திரன்" ஜாடை காட்டுகிறது. இதைப்பற்றி ஒரு பிராமணப் பத்திரிகையும் எழுதவேயில்லை. சட்டசபைக்கு நிற்க ஜனுப் சேட்டுக்குயோக்கியதை உண்டா, இல்லையா என்பதை முடிவு கூறவேண்டியவர் சட்ட மெம்பரான சர். சி.பி. இராமசாமி அய்யரேயாகும் இது ஒரு சிதம்பர ரகசியம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

சமாகவே மதிப்பார். ஆனால் அவைகளை விடாமலேயே காங்கிரசில் சேர்ந்து "நான்சுயராஜ்யத்திற்காக உயிரையும் விடுவேன்" என்றுயாராவது சொல்லுவதாயிருந்தால் அது கேலிக்கூத்தே தவிர வேறில்லை. [illegible]லம் ராவ் பகதூரையோ, திவான் பகதூரையோ விடாதவர்கள், கேவலம் சர்க்காரால் நியமனஞ் செய்யப்பட்ட ஒரு அற்பப் பதவியை விடாதவர்கள், எப்பொழுதும் கதர் கட்ட முடியாதவர்கள், சுயராஜ்யத்திற்காக உயிரையும் விடுவேன் என்று சொல்லுவதை ஜனங்கள் எப்படி நம்புவார்கள்?

சுயராஜ்யக் கட்சி தோன்றியது முதலே ஒன்றன்பின் ஒன்றாக பல சங்கடங்கள் நேர ஆரம்பித்தன. உண்மை தேசபக்தர்கள் சிலரைத் தவிர மற்றபடி ஒத்துழையாமை காலத்தில் ஒதுங்கி நின்ற பல ராவ்-திவான் பகதூர்கள் அதில் வந்து நுழைய ஆரம்பித்தன. காங்கிரஸில் சட்டமறுப்பு ஆரம்பிக்கப்பட்டால் இவையெல்லாம் நிலை நிற்காதென்பதை நாம் அறிந்தபோதிலும், தற்காலம் நாட்டிலுள்ள ராஜீயக்கட்சிகளில் அதுவே பிரதானமாய் விளங்கியபடியால் அதை ஆதரித்து வருகிறோம். மேலும் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்த பின்பாவது பட்டங்களையும், பதவிகளையும் விட்டுவிடுவார்களென்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி நடக்கவில்லை. சர்க்காரால் நியமனஞ் செய்யப்படுகிற பதவிகளிலே அவர்களில் சிலர் இன்னும் வீற்றிருப்பதோடு, கௌரவப் பட்டங்களையும் விட்டு விடவில்லை. பலர் சர்க்கார் சம்பந்தமான விருந்துக் கச்சேரிகளுக்குப் போவதை நிறுத்தவுமில்லை. கதரை எப்பொழுதும் அணிவதென்ற கொள்கையையும் லட்சியஞ் செய்யவில்லை. தமிழ் நாடு சம்பந்தப்பட்டவரையில், சட்டசபைத் தேர்தலுக்கு காங்கிரஸால் அபேட்சகராய் நிறுத்தப்பட்டிருப்பவர்களில் சிலர் இன்னும் கௌரவப்பட்டங்களை வகித்துக் கொண்டிருப்பதை அறியலாம். கதர் அணியாதவர்களுமிருக்கிறார்கள். சர்க்காரால் நியமனஞ் செய்யப்பட்ட பதவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கிறவர்களும் இருக்கிறார்கள். இவர்களை நியமித்திருப்பது காங்கிரஸ் கொள்கைக்கு அடுத்ததல்ல. ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இவ்வாரத்திய 'நவசக்தி'யில் இவ்விஷயமாக எழுதிய கட்டுரையை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். அவர் சொல்வதை நாம் முற்றிலும் ஆதரிக்கிறோம்.

சுயநலமில்லாத தியாக மூர்த்திகளாலேதான் நாடு விடுதலையடைய முடியும். எதற்கும் அஞ்சாத சுத்த வீரர்கள்தான் நாட்டுக்கு சுதந்திரத்தைத் தேடிக்கொடுக்க முடியும். ஆகவே காங்கிரஸின் கொள்கையை கொஞ்சங்கூட புறக்கணிக்காதவர்களாயிருக்க வேண்டும். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி அபேட்சகர்களை நியமித்தாய் விட்டது. இனி அதைப்பற்றி குறைகூறுவதில் பயனில்லை. ஆனால் அபேட்சகர்களில், சர்க்கார் தயவால் பட்டமோ, பதவியோ பெற்றவர்களை உடனே அவைகளை விட்டுவிடும்படி கேட்கவேண்டும். ஒத்துழைத்துப்பார்த்து பயனில்லை என்று அறிந்த பின்புதான் ஒத்துழையாமை தோன்றியது என்பதை மறந்துவிட வேண்டாம். ஆகவே ஒத்துழையாமையை மறந்து பழைய ஒத்துழைப்புக்கு இழுத்துக் கொண்டுபோகிற எச்செய்கையையும் கண்டிப்பாய் எதிர்க்கவேண்டும். அடுத்த காரியக் கமிட்டிக்கூட்டத்தில் இவ்விஷயம் கவனிக்கப்படுமென்று நம்புகிறோம். உத்தியோகம் பெறக்கூடாது, பட்டம் பெறக்கூடாது, இருக்கிற பட்டங்களை விட்டுவிடவேண்டும், எப்பொழுதும் கதர் அணியவேண்டும் ஆகிய 4 நிபந்தனைகளை கண்டிப்பாய் அபேட்சகர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்யவேண்டும். ஒட்டியில்லாமல் சுயராஜ்யக்கட்சிக்கு ஆள் கிடைத்தால் போதுமென்பதற்காக எல்லாரையும் சேர்த்துக் கொண்டு "வழ வழ" வென்று பேசிக்கொண்டிருந்தால் மற்றக்கட்சியாரை விட இந்தக் கட்சியார் சிலாக்கியமானவர்களென்று ஜனங்கள் ஒரு நாளும் நம்ப மாட்டார்கள். ஜஸ்டிஸ் கட்சியாரைத் தூற்றுவதற்கும் அர்த்தமில்லாமல் போய்விடும்.

ரோஜா முத்தையா

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

படித்தானே வியாக்கியானம் செய்வார்கள். ஆதலால் சுயராஜ்யம் இல்லாவிட்டாலும் ஸ்ரீமான் வீரய்யன் போன்றவர்கள் அந்த உத்தியோகத்திற்கு வரும்படியான வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இருந்தால் சுயமரியாதை ஏற்படுமா; இல்லையா? சுயமரியாதை ஏற்படாமல், வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் நம்பிக்கையும் ஏற்படாமல், நாம் எப்படி சுயராஜ்யத்தைப்பற்றி பேசமுடியும்?

### யார் சம்மதிப்பார்கள்?

நம்மிடமே சகல அதிகாரங்களையும் சகல ராஜ்ய பாரத்தையும் யாராவது ஒப்புவித்து விடுவதாயிருந்தால் பெற்றுக்கொள்ள நாம் இப்போது தயாராயிருக்கிறோமா என்பதை யோசித்துப் பாருங்கள். உதாரணமாக இந்த நாட்டிற்கே இப்பொழுது வைஸ்ராயாகயிருக்கும் லார்டு இர்வின் துரை பட்டாள முத்திரையையும் கஜானா சாவியையும் கொண்டுவந்து கொடுத்து நம்மை எடுத்துக் கொள்ளச் சொன்னால் நம்மில் எடுத்துக்கொள்ள யார் சம்மதிப்பார்கள். முதலாவது பிராமணர்கள் வந்து எடுப்பார்கள். அதை பிராமணரல்லாத ஹிந்துக்கள்-ஆதி திராவிடர்கள், மகமதியர்கள், கிறிஸ்துவர்கள் முதலான வகுப்பார் சம்மதிப்பார்களா? பிராமணரல்லாத ஹிந்துக்கள் எடுத்துக் கொள்ளுவதாயிருந்தால் பிராமணர்கள் சம்மதிப்பார்களா? பிராமணரும் பிராமணரல்லாதவர்களுமாகிய ஹிந்துக்கள் ராஜியாய் எடுத்துக்கொள்ளுவதானால் மகமதியர்கள் சம்மதிப்பார்களா? இந்த மூவரும் சம்மதித்து ஒப்புக்கொண்டால் கிறிஸ்துவர்கள் சம்மதிப்பார்களா? இந்நால்வரும் ராஜியாய் விட்டாலும் தெருவில் நடக்கவும் குடிக்கத் தண்ணீர் மொள்ளவும்கூட பாத்தியமில்லாமல் வைத்திருக்கும் ஆதி திராவிடர் என்கிற கூட்டத்தார் சம்மதிப்பார்களா? ஒவ்வொரு கூட்டத்தாரும் இர்வின் பிரபுவின் காலைப் பிடித்துக்கொண்டு ஒருவரை ஒருவர், "அப்யா! இந்தப்பாவிகளிடம் ஒப்புவித்துவிட்டுப் போனால் எங்கள் கதி என்னவது என்றும ஜாதி வித்தியாசமில்லாத ஜாதியாராகிய உங்கள் ராஜ்யபாரத்திலேயே நாங்கள் 'மிலேச்சர்', நாங்கள் 'தாசி மக்கள்', நாங்கள் 'அஞ்ஞானி', நாங்கள் 'மூடர்கள்' நாங்கள் தெருவில் நடக்க-கண்ணில்-பார்க்க-கிட்டவர-சுவாமியைக் கும்பிட முடியாத அவ்வளவு தாழ்ந்தவர்களாயிருக்கும்போது ஜாதித் திமிர், கூட்டத் திமிர், ஒற்றுமைத் திமிர், அரசாங்கச் சலுகைத் திமிர் பிடித்த இவர்களிடத்தில் பட்டாளத்தையும் கஜானாச் சாவியையும் கொடுத்துவிட்டுப் போனால் எங்களை நாய் பன்றிகளைவிட கேவலமாய் நடத்துவார்கள். கழுத்தில் கயிறு கட்டி சந்தையில் விற்பார்கள். ஆதலால், ஐயனே! நீங்கள் போய்விடாதீர்கள்," என்று ஒவ்வொருவரும் குறுக்கே படுத்துக்கொள்வார்களா, இல்லையா? நீங்களே யோசித்துப் பாருங்கள். உங்களை ஏமாற்ற வாயில் சுயராஜ்யம், உரிமை, ஒற்றுமை என்று பேசுவதில் என்ன பிரயோஜனம்? மகாத்மா இதை அறியாமலா தன்னை ஒரு வைஸிராய் "சுயராஜ்யம் என்றால் என்ன? என்னதான் வேண்டும்?" என்று கேட்ட காலத்தில் "சுயராஜ்யம் அடைய என் ஜனங்கள் இன்னமும் தயாராகவேண்டும். அதற்குத்தான் நான் தயார் செய்துகொண்டு வருகிறேன். அந்த தயார்தான் எனது நிர்மாணத் திட்டம்" என்று சொன்னார்.

நிர்மாணத் திட்டம் நிறைவேறாமல் மகாத்மாவினாலேயே பெறுவதற்குப் பாரமாயிருந்த சுயராஜ்யம், நிர்மாணத்திட்டத்தை புதைத்த நமது சீனிவாசய்யங்கார் கோஷ்டிக்கு மிக லேசாய்ப் போய்விட்டதென்றால் அதன் தத்துவத்தை நீங்களே யோசித்துப் பாருங்கள். சுயராஜ்யம் வந்தால் நமது நிலை என்ன? மகமதியர் நிலை என்ன? கிறிஸ்துவர் நிலை என்ன? என்பது தீர்மானமாகிவிடவேண்டும். இல்லாதவரை ஒருவரை ஒருவர் கொன்று தின்பதுதான் நமது நாட்டில் நடைபெறும். உத்தியோகமும், அதிகாரமும்பதவியும்,ஒருக்காலமும் சுயராஜ்யமாகாது. சுயமரியாதையுடன் ஒற்றுமையால் தாங்கள் தங்கள் ஜீவனத்திற்காக தங்கள் தங்கள் மனச் சாக்ஷியையும் கற்பையும் விற்காமல் ஜீவனம் செய்வதுதான் சுயராஜ்யம்; இதற்கு நிர்மாணத் திட்டந்தான் முக்கியமானது. இவைகள் எல்லாவற்றிலும் கதரும். தீண்டாமை ஒழிப்பதும் மிகவும் முக்கியமானது. ஆதலால் நீங்கள் ஒவ்வொருவரும் கதர் உடுத்துங்கள்; தீண்டாமையை அறவே ஒழியுங்கள்; வகுப்புவாரி உரிமையை நிலை நாட்டி எல்லோருடைய நம்பிக்கையையும் பெறுங்கள்: இல்லாதவரை துவேஷம் வளர்ந்துகொண்டுதான் வரும். இப்போது பாமர ஜனங்களை ஏமாற்றி சிலர் பதவிக்கு வந்துவிடுவதால் அதனால் ஏற்படும் பலன் பின்னால் அவர்கள் சந்ததியாருக்கு ஆபத்தாய் முடியும் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். ஆதலால் எல்லோரும் ஒன்றுகூடி ஒரு திட்டம்போட்டு ஒருவருக்கொருவர் நம்பிக்கை உண்டாக்கி பிற்கால வாழ்வை பயமற்றதாக்கிக் கொள்ளுங்கள்.

## கோபி தாலூகா "மகாநாடு"

திரு. எஸ். சீனிவாசய்யங்கார் தலைமையில் கோபிசெட்டிபாளையத்தில் கூடிய மகாநாடு என்னும் ஓட்டுப் பிரசாரக் கூட்டத்தைப் பற்றி அங்கு நடந்த உண்மை நடவடிக்கைகளையும், நடந்த நடவடிக்கைகளைத் திரித்து உண்மைக்கு மாறாய் பார்ப்பனப்பத்திரிகைகளில் வரும் பொய்குவிந்த விஷயங்களைப் பற்றியும் அன்பர்கள் கத்தை கத்தையாய் எழுதியிருக்கிறார்கள். அவற்றை பிரசுரிக்க இவ்வார "குடி அரசில்" இடமின்மையால் அடுத்தவாரம் அவற்றைச் சுருக்கி வெளியிடுகிறோம்.

## திருவனந்தபுரம்
## தொழிலாளர் சங்க 3-வது மகாநாடு.

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் தலைமையின் கீழ் திருவனந்தபுரம் தொழிலாளர் சங்கத்தின் 3-வது மகாநாடு ஆளப்போவில் 20-6-26-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிராமணர்கள் சொந்த விஷயங்களைப்பற்றி பேசக்கூடாது என்று கூச்சல் போட்டார்கள். அது ஒப்பத்தக்கதல்ல. பேசுவதை கேட்கவேண்டும். பேசியதில் குற்றமிருந்தால் அதற்கு சமாதானம் கேட்கலாம். அப்படிக்கில்லாமல் கூச்சல் போட்டு கூட்டத்தைக் கலைக்கலாம் என்று எண்ணுவது பயித்தியக்காரத்தனமாகவேமுடியும். நான்கு நாளைக்கு முன் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் அவரது கோஷ்டியும் இதே இடத்தில் அளந்து கொட்டின வசையும், திட்டும் கணக்கா? வளக்கா? பிராமணரல்லாதார்கள் பொறுமையுடன் அவ்வளவையும் சகித்துக் கொண்டிருக்க வில்லையா? அவர்களுக்கு இந்த சில பிராமணர்களைப் போல் கூச்சல் போடத் தெரியாமல் போய்விட்டது என்று நினைக்கிறீர்களா? எப்பொழுதும் பிரசங்கக் கூட்டத்தில் கூச்சல் போடுவது கெட்ட வழக்கம். நான் அடிக்கடி இதை கண்டித்தே வருகிறேன். இந்த வழக்கம் மிஞ்சிவிட்டால் யாருக்கு ஆபத்து என்பதை நினைத்துப் பாருங்கள்.

### ஐயங்காருக்கும் எனக்கும் வித்தியாசம்.

நான் எவரைப்பற்றியும் குற்றஞ் சொல்ல வேண்டுமென்கிற ஆசையுடையவனல்ல. நேற்று இங்கு வந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் என்னைப்போல் சமூக ஊழியர்தான். எனக்கு அவரிடத்தில் வெறுப்பில்லை. நான் ஏதாவது என் சொந்தத்திற்கு ஒயில் எழுதுவதாயிருந்தால் அவரைத்தான் யோசனை கேட்பேன். அவரும் என்னைப்பற்றி தனியாய்ப் பேசினபோது தனது நண்பர்களிடம் என்னை மிகவும் நம்புவதாகவும், என்னிடம் சூதுவாது இல்லையென்றும் பேசியிருக்கிறார். நான் எப்படி பிராமணரல்லாதார் சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமென்று பாடுபடுகிறேனோ, அதுபோலவே அவர் பிராமண சமூகம் முன்னேறவேண்டுமென்று பாடுபடுகிறார். ஆகவே இரண்டு பேருடைய நோக்கத்திலும் உழைப்பிலும்வித்தியாசமில்லை. ஆனால் நான்உண்மையைச் சொல்லிக் கொண்டு எனது சமூகத்திற்குப் பாடுபடுகிறேன்; அவர் பொய்யைச் சொல்லிக் கொண்டு அவருடைய சமூகத்திற்குப் பாடுபடுகிறார். அதாவது நான் பிராமணல்லாதார் பெயரைச்சொல்லுகிறேன்; அவர் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி, மகாத்மா, ஜெயிலுக்குப்போன தேசபக்தர்கள் என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டு பிராமணருக்குப் பாடுபடுகிறார்.

கொஞ்ச நாளைக்கு முன் நான் சென்னைக்கு முனிசிபல் தேர்தலின்போது ஓட்டர்கள் விருப்பத்தின் பேரில் போயிருந்தேன். அங்கு நான் பேசிய இரண்டொரு கூட்டத்தில் "தேர்தலில் ஒரு பிரயோஜனமும் இல்லை. அதனால் ஒருபலனும் செய்ய முடியாது. அது ஒரு பதவி. அதில் உங்களுக்கு மோகமிருந்தால் அதை ஒரு பிராமணரல்லாதாருக்குக் கொடுங்கள்," என்று தைரியமாய்ச் சொல்லி வந்தேன்.

ஆனால் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அப்படிச் செய்யவில்லை. ஒரு பிராமணரை நிறுத்தி, மறைமுகமாய் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி பெயரைச் சொல்லிக்கொண்டு முனிசிபாலிட்டியில் ஏழைகளுக்கு அப்படிச்செய்கிறோம்; இப்படிச் செய்கிறோம்; வரியைக்குறைக்கிறோம் என்று பொய் சொன்னதல்லாமல்; மகாத்மா ஜெயிலுக்குப் போனார், வரதராஜுலு நாயுடு, இரண்டுமுறைஜெயிலுக்குப்போனார்; இராமசாமி நாயக்கர் மூன்று முறை ஜெயிலுக்குப் போனார், ஆனதினால் ஸ்ரீமான் இ. எல். ஐயருக்கு ஓட்டுப் போடுங்கள் என்று விளம்பரம் போட்டு ஓட்டு வாங்கினார். அவர்கள் ஜெயிலுக்கு போனதின் பலனை இவர்கள் அடைய என்ன வாரசு பாத்தியம்? இதுதான் எனக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம்.

### சமூகம் அழிவதை பார்த்துக் கொண்டிருப்பதா?

அவரவர்கள் சமூகத்திற்கு அவரவர்கள் பாடுபடுவதை நான் ஆக்ஷேபிக்க வில்லை ஆனால் பொது ஜனங்களை—பாமர மக்களை ஏமாற்றிக் கொண்டும், சுயராஜ்யம் உரிமை என்று சொல்லிக்கொண்டும் பிராமணரல்லாத பிரமுகர்களை சர்க்கார் உத்தியோகம் பெறுகிறவர்கள்-தேசத்துரோகிகள் என்று திட்டிக்கொண்டு வைவதற்காக பிராமணரல்லாதாரிலேயே வேறுவழியில் பிழைக்கமுடியாத சில ஆளுகளுக்குப் பணம் கொடுத்து உத்தியோக ஆசைபிடித்த சில ஆள்களை ஆசைவார்த்தை சொல்லி தங்கள் வசப்படுத்திக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சி என்கிற பெயரால் பிராமணரல்லாத சமூகத்தையே அடிமையாக்க—தீண்டாதவர்களாக்கப்— பார்த்தால் அதை எப்படி சகிக்க முடியும்? எந்த சமூகத்திலும் இப்படிப்பட்ட சுய நலக்கார ஆட்கள் இரண்டொருவர் இருக்கத்தான் செய்வார்கள். அப்படிப்பட்ட ஆள்களை இவர்கள் உபயோகித்துக் கொண்டு ஒரு பெரிய சமூகத்தையே அழிக்கப் பார்க்கிறார்கள்.

### காங்கிரஸ் பெயரால் உத்தியோகம்.

பிராமணர்களுக்கோ, அல்லது அவர்கள் கட்சியான காங்கிரஸ்சுயராஜ்யக்கட்சிக்கோ, எதற்கு உத்தியோக ஆசையில்லை? பிராமண ஹைகோர்ட் ஜட்ஜிகள் எல்லாம் காங்கிரஸின் பேரால் உத்தியோகம் சம்பாதித்தவர்கள் தான். நிர்வாகசபை மெம்பர்கள், ஸ்ரீமான்கள் கிருஷ்ணசாமி ஐயர், ஸி. பி. இராமசாமி அய்யர் ஆகியவர்கள் காங்கிரசின் பேரால் உத்தியோகம் சம்பாதித்தவர்களேயாகும். பிராமணரல்லாதார் கட்சியாரை மாத்திரம் உத்தியோக வேட்டைக்காரர்கள் என்பதற்குப் பொருளென்ன? ஜஸ்டிஸ் கட்சிக்காரர் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டார்கள் என்று பொருமைப் பிரசாரம் செய்வதில் ஏதாவது அவர்களுக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கிறதா?

### கண்ணியமாய் சட்ட சபை சென்ற ஜஸ்டீஸ் கட்சி.

ஜஸ்டீஸ் கட்சிக்காரர் சுயராஜ்யக் கட்சியாரைப் போல் ஏதாவது பொய் சொல்லி ஓட்டர்களை ஏமாற்றி சட்ட சபைக்குப் போனார்களா? ஒருக்காலும் இல்லை. ஜஸ்டீஸ் கட்சியார் கண்ணியமாய் ஓட்டர்களிடம் சென்று "நாங்கள் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் அல்ல; காங்கிரஸ் பிராமணர்களின் நன்மையின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது; நாங்கள் பிராமணரல்லாதார் நன்மையின் பொருட்டுபாடு படுகிறோம்; நாங்கள் பொய்யான ஒத்துழையாமைக் காரரல்ல; சீர்திருத்தத்தை ஏற்று; சட்ட சபைக்குச் சென்று சர்க்காரோடு ஒத்துழைத்து; சர்க்கார் உத்தியோகங்களை ஏற்று; பிராமணரல்லாதாருக்கும் தேசத்துக்கும் எங்களால் கூடியதைச் செய்வோம்" என்று சொல்லி சட்டசபைக்குள் நுழைந்தார்கள். ஓட்டர்களும் அதை யேற்றுக் கொண்டு அவர்களையே அனுப்பினார்கள். அப்படி இருக்க, அவர்கள் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டார்கள் என்று சொல்லிப் பொருமைப்படுவதில் என்ன பிரயோஜனம். சுயராஜ்யக் கட்சியார் பிரயாணப்படி கூடவாங்குவதில்லை என்று சொல்லி சட்டசபைக்குப் போய் தினக்கூலி பெறக்கூடிய கமிட்டி பதவியும், மாதச்சம்பளம் பெறக்கூடிய உத்தியோகமும் பிரயாணப்படியும் பெற்று, சர்க்காருக்கும் அனுகூலமாயிருந்து, சர்க்கார் எதிர்பார்த்ததற்கு மேல் ஒத்துழைப்பதைப் பற்றி கொஞ்சமும் வெட்கப்படாமல் மேடைக்கு வந்து பொது ஜனங்களை ஏமாற்றுவது எவ்வளவு பெரிய பித்தலாட்டமான காரியம்?

### அதிகச்சம்பளம்.

சுயராஜ்யக்கட்சி உபதலைவர் ஸ்ரீமான் பட்டேல் மாதம் 4000 ரூபாய் சம்பளம் வாங்குகிறார். இது யாருடைய பணம்? இது பொது ஜனங்களின் பணமல்லவா? காங்கிரசையும் ஒத்துழையாமையையும் சுயராஜ்யக் கட்சியையும் சேர்ந்த "தேசபக்தர்" பட்டேலுக்கு மாதம் 4000 ரூபாய் எதற்காகவேண்டும்? அவர் உடுத்திக்கொள்ள 6 முழக் கதர் போதும், குடியிருக்க ஒரு குச்சுவீடு போதும். இப்படிப்பட்ட தேசத் தொண்டருக்கு மாதம் ரூ. 11—4—0 இருந்தால் போதும். இவருக்கு மாதம் 4000 ரூபாய் எதற்கு? இது உத்தியோகம் பெறுவதில்லை என்று போனவர் பெறும் சம்பளம். இவருக்கே மாதம் 4000 ரூபாய் வேண்டியதிருந்தால் உத்தியோகம் பெறப் போனவர், பெரிய ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாதம் 4000 ரூபாய் என்றால் எது அதிகம்? யாருக்கு உத்தியோக ஆசை? இதில் யார் யோக்கியர்கள்? என்பதை நீங்களே யோசியுங்கள்.

### சம்பளம் குறைத்துக்கொண்டது யார்?

அல்லாமலும் நமது பிராமணரல்லாத மந்திரிகள் "பணத்தாசை பிடித்தவர்கள்" என்று சொல்லுபவர்கள் தாங்களாகவே மாதம் 5000 ரூபாய் சம்பளத்தை 4000 மாக ஆக்கிக்கொண்டார்கள். வருஷம் ஒன்றுக்கு ஒரு லக்ஷத்துப் பதினெட்டாயிரம் ரூபாய் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். 6 வருஷத்திற்கு 7லட்ச ரூபாய் அவர்களுக்கு வருவதை வேண்டாமென்று சொல்லி விட்டார்கள். காங்கிரஸ் காரியதரிசியாயிருந்தும் தேசத்தாருக்குப் பாடுபடுவதாய்ச் சொல்லியும் நமது ஓட்டுப்பெற்று சட்ட சபைக்குப் போய் உத்தியோகம் பெற்ற பிராமணர் சர். ஸி. பி. ராமசாமி அய்யர் எவ்வளவு ரூபாய் தனது சம்பளத்தில் குறைத்துக்கொண்டார்? பொது ஜனங்களுக்கு— ஏழைகளுக்கு உழைப்பவர்கள் என்னும்

தேசவிடுதலைக்காக உழைப்பவர்கள் என்றும் பிரயாணப்படி வாங்குவதில்லை என்றும் சட்டசபைக்குப்போன ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யங்கார், எம். கே. ஆச்சாரியார் இவர்கள் எவ்வளவு படிப்பணமும் கமிட்டிப்பணமும் மறைத்துக் கொண்டார்கள்? பாமர ஜனங்கள் பைத்தியகாரராய் இருப்பதால் இவர்கள் பிராமணரல்லாதாரை அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு ஊர் ஊராய்த் திரிகிறார்கள்.

### "இவர்கள் யார்?"

அல்லாமலும் ஜஸ்டிஸ் கட்சியார் தங்கள் இனத்தார்களுக்கு உத்தியோகம் கொடுப்பதாகவும் நாமினேஷன் செய்வதாகவும் மந்திரிகள் பேரில் குற்றம் சுமத்துகிறார்கள். மந்திரிகள் பிராமணர்களுக்குக் கொடுக்கும் உத்தியோகத்தை இவர்கள் வெளியில் சொல்லுகிறார்களா? ஸ்ரீமான்கள் தணிகாசலம் செட்டியாருக்கும், சி. எஸ். இரத்தின சபாபதி முதலியாருக்கும் நாமினேஷன் செய்தால் அதிகாரத்துஷ் பிரயோகம் என்கிறார்கள். ஸ்ரீமான்கள் சி. வி. வெங்கிட்டரமணய்யங்காருக்குக் கோயமுத்தூர் ஜில்லா போர்டு மெம்பரும், டி. எம். நரசிம்மாச்சாரியாருக்கு கடப்பை ஜில்லா போர்டு பிரசிடெண்டும், சர். டி. தேசிகாச்சாரியாருக்கு திருச்சி ஜில்லா போர்டு பிரசிடெண்டுமான பதவிகளுக்கு நாமினேஷன் செய்தார்களே; இவர்களெல்லாம் பிராமணரல்லாதார்களா? அல்லது பிராமணரல்லாதார் கக்ஷியைச் சேர்ந்தவர்களா? இந்த பிராமணர்கள் மந்திரிகளிடம் உத்தியோகம் பெற்றுக்கொண்டதைப் பற்றி எந்த பிராமணர்களாவது பிராமணப் பத்திரிகைகளாவது ஏதாவது ஒரு வார்த்தை சொல்லுகின்றதா?

### எலெக்ஷன் நாணயம்.

தவிர, இந்தக்காலத்து எலெக்ஷன்களாவது யோக்கியமாய் நடக்கின்றதா? எலெக்ஷன்களுக்கு நிற்கிற ஆள்கள் ஓட்டர்களுக்குப் பணங்கொடுத்துப் பழக்கி அவர்களின் நாணயத்தைக் கெடுத்து விட்டதால் யோக்கியர்கள் எலெக்ஷனில் வா யோக்கியமில்லாமல் போய் விட்டது. அப்படியில்லையானால் ஒவ்வொருவருக்கு இருபது, முப்பது ஆயிரம் ரூபாய் செலவாகக் காரணம் என்ன? அல்லாமலும் சட்ட சபையில் நடக்கும் காரியந்தான் என்ன? எப்படியிருக்கிறது? எப்படியாவது பிராமணரல்லாதார் கெட்டவர்கள்-புத்தியில்லாதவர்கள் என்கிற பெயரை தேசத்தில் பரப்பி பாமர ஜனங்களை வஞ்சிக்க வேண்டும்; பிராமணரல்லாத உத்தியோகஸ்தர்களையும் கெடுக்க வேண்டும்; இதுதான் சுயராஜ்யக் கட்சி என்கிற பிராமணர்களின் கட்சிக்கொள்கை.

### திரு. இராமசாமி முதலியார் இல்லாவிட்டால்

உதாரணமாக ஒரு சமயம் சட்ட சபையில் ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியார் இல்லாத சமயம் பார்த்து 'சுத்தவீரரான'(!) ஸ்ரீமான் சத்தியமூர்த்தி "வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள ஒரு பிராமணரல்லாத உத்தியோகஸ்தர் எலக்ஷனில் பிராமணரல்லாதாருக்காகப் பிரயத்தனப் படுகிறார். அவரைப் பற்றி விசாரித்து அவரை தூக்கில் போட வேண்டும். இது மகா முக்கியமான காரியம். ஆதலால் சட்ட சபையின் மற்ற காரியங்களை கட்டி வைத்துவிட்டு இதை கவனிக்கவேண்டும்" என்று ஒரு பெரிய தீர்மானம் கொண்டுவந்தார். தட்டிப்பேச அது சமயம் அங்கு ஆளில்லை. பிரசிடெண்டு இந்த தீர்மானம் ஒழுங்கானதா என்று கேட்டார். இருபதாவது நூற்றாண்டின் 'மனு'வான சர் சி. பி. ராமசாமி ஐயர், "ஆ, ஹா! மிகவும் ஒழுங்கானது" என்று சொல்லிவிட்டார். சரியென்று சத்திய மூர்த்தி "ஐயர் வாதம் தொடங்கி விட்டார். பிராமண ரல்லாத உத்தியோகஸ்தருக்கு சுருக்கு மாட்டியாய் விட்டது; இழுப்பதுதான் தாமதம்.

இந்த சமயத்தில் ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியார் சட்ட சபைக்குள் நுழைந்தார். என்ன நடக்கிறது என்று பார்த்தார். நடக்கிற விஷயத்தைத் தெரிந்துகொண்டார். உடனே ஸ்ரீமான் முதலியார் எழுந்து, "அது நிரம்பவும் முக்கியமான காரியம். இதைச் செய்துவிட்டுதான் மற்ற காரியங்களைக் கவனிக்கவேண்டும். நானும் இந்தத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்றுதான் இருந்தேன். எனது நண்பர் சத்தியமூர்த்தி கொண்டு வந்ததற்கு வந்தனம் செலுத்துகிறேன். சட்ட மெம்பர் இதை அனுமதித்ததற்கும் வந்தனம் செலுத்துகிறேன்" என்று சொல்லி விட்டு "இன்னும் இரண்டொரு நபர்கள் பெயரையும் அந்த ஜாப்தாவில் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி இரண்டொரு ஐயங்கார் ஜில்லா முனிசிபு பெயர்களையும், ஐயர் சப் ஜட்ஜி பெயர்களையும் சொன்னார். உடனே சட்ட மெம்பருக்கும் 'வீரருக்கும்' நாக்கு வரண்டுபோய், பேச வார்த்தை வராமல் திக்குமுக்காடி 'வீரர்' சத்தியமூர்த்தி ஐயரை 'மனு' ராமசாமி ஐயர் பிரேரேபணையை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி பல்லைக்காட்டி கெஞ்ச ஆரம்பித்துவிட்டார். வீரரும் பின் வாங்கிக்கொண்டார். மற்ற பொம்மைகள் எல்லாம் சிரித்தனர் ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியார் அன்றயக் கூட்டத்தில் இல்லாதிருந்தால் அந்தப்பிராமணரல்லாதார் 'ஓலை' 'மனு' ஐயரால் கிழிக்கப்பட்டே இருக்கும். இதுதான் சட்டசபை வேலை.

மற்றொரு சமயம் அபிஷியல் ரெபரி (Official reffery) என்கிற சுமார் மாதம் 1000 ரூபாய் சம்பளமுள்ள ஒரு உத்தியோகம் தற்கால சாந்தியாய் ஆக்கப்படும்போது சுயராஜ்யக் கட்சி மெம்பர்கள் ஆக்ஷேபித்தார்கள். அது சர்க்கார் மெம்பர்கள் தயவில் நிறைவேறி கடைசியாய் ஒரு பிராமணருக்கு அந்த உத்தியோகம் கொடுக்கப்பட்டு மறுபடியும் அது காயமாக்க சட்ட சபைக்கு வரும்போது சுயராஜ்யக் கட்சி மெம்பர்கள் தாராளமாய் நிறைவேறச் செய்தார்கள். ஏன்? அந்த உத்தியோகம் ஒரு பிராமணருக்குக் கிடைத்தது.

### சத்தியம் தவறிய திரு. சத்தியமூர்த்தி.

மற்றொரு சமயம் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும் ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியாரும் சீமைக்குப் போயிருந்தபோது, ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஸ்ரீமான் இராமசாமி முதலியாரைப்பார்த்து, "நம் நாட்டிலுள்ள பிராமணர்-பிராமணரல்லாதார் விஷயம் வெள்ளைக்காரர்களிடம் பேசக்கூடாது; அதைப்பற்றிநமது நாட்டில் பேசிக்கொள்ளலாம்; இங்கு பேசினால் எதிரிக்கு இளப்பமாய்ப் போய்விடும்; நானும் ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி பேசுவதில்லை," என்று கேட்டுக்கொண்டாராம். ஸ்ரீமான் முதலியார் அதற்கிணங்கி அங்கு இருக்கும் வரை பிராமணரைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையாம். ஸ்ரீமான் முதலியார் சீமையை விட்டுப்புறப்பட்டு கப்பல் ஏறியவுடன் சத்தியமூர்த்தி ஐயர் தாங்கள் செய்து கொண்ட சத்தியத்தை மீறி மூட்டையை அவிழ்த்து விட்டாராம். இவற்றைப் பத்திரிகைகளில்கூட நீங்கள் பார்த்திருக்கலாம். இம்மாதிரி கூட்டத்திடன் போராடுவதென்றால் லேசான காரியமல்ல. ஆதலால் பிராமணரல்லாதார் இது சமயம் சுயராஜ்யம், உரிமை, விடுதலை, முட்டுக்கட்டை என்கிற போலி வார்த்தைகளைக் கண்டு ஏமாந்துவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

சட்ட சபையோ முனிசிபாலிட்டியோ இவைகளில்; ஏதாவது தேசத்திற்கோ சுயராஜ்யத்திற்கோ ஏழை மக்களுக்கோ ஒரு பிரயோஜனமும் தராது. அது ஒரு பதவி. அல்லாமலும் தாழ்ந்து கிடக்கும், பிற்போக்கடைந்திருக்கும் வகுப்பார் உயர்ந்த வகுப்பார் என்பவர்கள் காலில் மிதிபடாமல் இருப்பதற்கு ஏதாவது வேண்டுமானால் உபயோகப்படலாம். அம்மாதிரி அதை உபயோகப்படுத்திக்கொள்ள நம்பிக்கையும் ஆசையும் உள்ளவர்கள் அப்பதவிகளை தங்கள் சமூகத்தில் அக்கரை உள்ள சமூகத்தார்களுக்குக் கொடுக்கவேண்டுமேயல்லாமல் மற்றபடி சுயராஜ்யம், தேசம், உரிமை என்று எண்ணி ஏமாந்து சமூக கவலையில்லாதவர்களுக்கோ, பிராமணர்களுக்கோ கொடுக்கக்கூடாது, என்பதுதான் நீங்கள் கடைசியாக உணரவேண்டியது.

### சமூகமே பெரிது.

மௌலானாக்கள் மகமதலி, ஷவுக்கத்தலி, கிச்சுலு போன்ற வீரர்களின் அபிப்பிராயமென்ன? அவர்களைப்பற்றி பிராமணப் பத்திரிகைகள் பலவாறு தூற்றினாலும் அவர்கள் பேரில் துவேஷம் உண்டாகும்படி எழுதினாலும் அவர்கள் தைரியமாய்ச் சொல்லுவது என்ன? நமது சுயராஜ்யத்தைவிட நமது சமூகத்தின் சுய மரியாதைதான் முக்கியமானது என்கிறார்கள். அதுபோலவே பிராமணரல்லாதாராகிய நமக்கு சுயராஜ்யத்தைவிட நமது சமூகத்தின் சுய மரியாதைதான் முக்கியமானது. உதாரணமாக, சட்ட சபையில் கல்பாத்தி தெருவில் எல்லோரும் நடக்கலாம்; அதாவது பொதுத் தெருவில் மகாராஜா சக்கிரவர்த்தியின் பிரஜைகள் எல்லோருக்கும் சம உரிமை உண்டு என்று ஒரு தீர்மானம் நிறைவேறிற்று. அடுத்த நாள் 'வேலை இருந்தால்தான் போகலாம்' என்று பிராமண சட்ட மெம்பர் அத்தீர்மானத்திற்கு வியாக்கியானம் எழுதிவிட்டார். அந்த ஸ்தானத்தில் ஸ்ரீமான் ஆர். வீரய்யன் இருந்தால் இந்தப்படி வியாக்கியானம் செய்திருப்பாரா என்று யோசித்துப் பாருங்கள். நமக்கு சுயராஜ்யம் வந்தாலும் இத்தகைய பிராமண சட்ட மெம்பர்கள் இப்

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)

ரோஜா முத்தையா

கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

**அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.**

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாணாக்கர், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்ணெரிவு, கண் சிகப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க்கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருதலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல் செம்பட்டை, ஆரம்ப நரை, தேகநாற்றம், முதலிய வியாதிகளைப்




போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.

12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

**சத்திய வேத வீரிய தாது லேகியம்.**

20-நாள் 40-வேளைக்கு விலை ரூ. 2.

தேகாரோக்கியம் குன்றி, தேகம் மெலிந்து உட்காரவும் எழுந்திருக்கவும் சக்தியற்ற நிலைமையிலுள்ளவர்களுக்கு சுறு சுறுப்பு, புஷ்டி, ஆண்மை முதலியவற்றை ஊட்டும். மூத்திரச் சூடு, சுக்கில ஸ்ராவகம், கல்லடைப்பு, துறிப்புண் உஷ்ணப்புண், அஸ்தி உருக்கம் முதலிய பயங்கர வியாதிகளின் ஆணி வேரைக் கெல்லி பெரித்து தாதுவை கெட்டிப்படுத்தி தேகத்தை வனப்புறச் செய்யும் கைகண்ட ஔஷதம் சத்திய வேத வீரிய தாதுலேகியம் ஒன்றே.

விலாசம் தெரியப்படுத்தினால் சத்திய வேத வைத்திய சாலையில் செய்யப்படும் சகல வியாதிகளையும் போக்கும் மருந்துகளின் விபரமடங்கிய கேட்லாக் அனுப்பப்படும்.

குறிப்பு:— டாக்டர் ஜி. எல். சாமி அவர்கள் திருச்சினாப்பள்ளி இடத்தெருவில் தருமசிகிச்சை வைத்திய சாலை ஒன்று நடத்தி வருகிறார். பிரதிதினமும் நூற்றுக்கணக்கான வியாதியஸ்தர்கள் இனமாக மருந்து வாங்கி சாப்பிட்டு குணமடைந்து வருகிறார்கள்.

டாக்டர். ஜி. எல். சாமி,

சத்திய வேத வைத்தியசாலை, வாகசேரி—திருச்சினாப்பள்ளி.

வயோதிகர்—வாலிபர்கள்

## சம்பாஷணை.

(நாடோடி எழுதுவது)

வா—ஐயா பெரியவரே, நீங்கள் நாடார் குல மித்திரன் பத்திரிகை வாங்கிப் படிக்கிறீர்களா?

வ—என்ன நாலாட்டின் புத்தூரா.

வா—என்ன ஐயா உங்களுக்கு காது செவிடா?

வ—ஏன்?

வா—நடார்குல மித்திரன் படிக்கிறீர்களா?

வ—அதொண்ணு இருக்கா?

வா—என்னய்யா, உங்கள் முன்னேற்றத்திற்காக ஏழு வருஷமாய் நடக்கிறது. அதுவும் உங்கள் மனுஷாளே நடத்துகிறார்கள்.

வ—நமக்கிருக்கிற சோலியில் அதையெல்லாம் படிக்க நேரமில்லை.

வா—ஐயா, உங்கள் ஒவ்வொரு நேரத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால் வீணுகப்போகிற நேரமே மேலாயிருக்குமன்றோ? உங்கள் குல முன்னேற்றத்திற்கு ஏற்பட்ட பத்திரிகையை பார்க்கக்கூடவா நேரமில்லை.

வ—எதுக்கப்பா வீண் செலவு.

வா—ஐயா, உங்கள் நித்திய வாழ்க்கையில் மென்றுமிழும் வெற்றிலை பாக்கும் வயிற்று நோய்கொடுக்கும் பீடி சிகரட்டுச் சுருட்டும் நாசியைக் கெடுக்கும் நாசிப் பொடியும் காப்பிக்குடியும் கூத்தும் கல்யாணக் காலத்தில் தாசியாட்டமும் மற்றுஞ் சொல்லொணாப் பல செலவுகளை வீண் செலவன்றி இதை வீண் செலவென்று சொல்லலாமோ!

வ—எங்கள் பிள்ளைகளுக்கு இதெல்லாம் பிடிப்பதப்பா.

வா—ஐயோ, ஐயா உங்கள் பேரன்கள் அடுத்த கடையில் ஓடிஓடிப்போய் நாடார்குல மித்திரனைத் தேடிப் பிடித்துப் படிக்கிறான், சிலவேளைகளில் அக்கடைக்காரர்கள் மனச்சோர்வுபட்டு என்னடா கஞ்சப்பயல்களே, உங்கள் வீட்டில் காசில்லையா? நாலு ரூபாய் கொடுத்து உங்களப்பனை ஒன்று தருவிக்கும்படி சொல்கிறதுதானே என்று கேலியாய் இடித்துச் சொல்கிறார்கள். அப்போது அப்பொடியன் எனக்குச் சம்மதந்தான்; எங்கப்பா வேண்டாமென்கிறார் என்று சொல்கிறான். நீயே தருவித்துக்கொள்கிறது தானே என்கிறார்கள்—அதற்கவன் ரூபாய் வேண்டுமே என்கிறான். அவர்கள் அடபயலே காலையும் மாலையும் காப்பிக்கிளப்புக்கு பீடி சிகரட்டு வெற்றிலைபாக்கு வாசனைப்புகையிலை பொடிக்கும் ரூபாய் ரூபாயாய் செலவு செய்கிறவனுக்கு வருஷத்துக்கு நாலு ரூபாய் பஞ்சமாவென்று கேள்கிறார்கள். பையன் அடுப்பங்கடையிலகப்பட்ட சுணங்கன்போல் விழிக்கிறான்.

வ—ஆகா அப்படியா? பையன் வந்தவுடனே கண்டித்து நமக்கந்த வேலை வேண்டாமென்று சொல்லி வைக்கிறேன்.

வா—அவன் படிப்பதற்கு இங்கொரு பத்திரிகை வேண்டுமைபா.

வ—அவன் படிக்கமாட்டானே. அவனை ஒரு வார்த்தை கேட்டுக்கொள்ளுவோம் என்று முகத்தைக்கோணிக்கொண்டு அடே, நவரத்தினம் என்று கூப்பிட்டு நீயென்ன பத்திரிகை படிக்கிறபாமென்றார். பையன் தலைபைச் சொறிந்தான்.

வா—ஐயா அதிக நேரமாகிறது. ஒரு பத்திரிகைக்கு ஆர்டர் கொடுங்கள்.

வ—ஏது இதன் பேரில் இவ்வளவு அக்கறை பெடுத்துக்கொண்டலைகிறீர்கள்? வேறுவேலை பார்த்தாலும் நல்ல கூலி கிடைக்குமே.

வா—பொது ஜன ஊழியமே எங்களுக்கு அக்கரையாகும். அதனுண்டாகுந் திருப்தியே எங்களுக்குப் பெரிய கூலியாகும்.

வ—சரி சரி ஒன்றனுப்பச்சொல்லுங்கள். வருஷ முடிவில் பணங்கொடுப்போம்.

வா—ஐயா அப்படிச் சொல்லாதீர்கள். முன்பணங் கொடுக்கவேண்டும்.

வ—அப்படி என்ன அவசரம் வந்துவிட்டது? தொந்தரவு செய்கிறீர்களே.

வா—ஐயா! தற்சமயம் 1,000-ம் புதுச்சந்தாதார்கள் சேர்த்து முன்பணமாகவே வாங்கி பத்திராதிபரை உற்சாகப் படுத்தி பத்திரிகையை அதிக விருத்தி செய்யும்படி செய்யப்போகிறோம். ஆகையால் தயவுசெய்து கொடுத்தனுப்புங்கள்.

வாலிபர்களுடைய தாழ்மையான பிடிவாதத்தை வெல்லமுடியாத வயோதிகர் புன்சிரிப்புடன்நாலு ரூபாயை எடுத்துக் கொடுத்துவிட்டு ஈயாத தம்மிடத்திலும் ரூபாய் வாங்கிவிட்ட அவர்களுடைய திறமையைப் பற்றி மனதிற்துள்ளேற்பட்ட சந்தோஷமேலீட்டினால் பையனை பத்திரிகை தவறாமல் படிக்க வேண்டுமென்றெச்சரிக்கை செய்தார். (நாடார்குல மித்திரன்.)

### முஸ்லீம்களும் சட்டசபைத் தேர்தல்களும்.

### பீகார் முஸ்லீம் தேசீய கட்சி.

இந்தியாச் சட்டசபை மெம்பராகிய ஜனாப் முஹம்மத் ஷாபிதாவூதி பகல் பூரிலிருந்து பின்வருமாறு தெரிவிக்கிறார்:—

அடுத்த தேர்தல் (மாகாண சட்டசபை இந்தியாசட்டசபை) சம்பந்தமான சகலப் பிரச்சனையும் பீகார் கிலாபத்கமிட்டி ஆலோசனைசெய்து முஸ்லிம்கள் தனியாகதேசிய சபையை ஸ்தாபித்து காங்கிரஸ் திட்டத்தை நடத்திவைக்க வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள். விஷயம் இன்னும் திட்டமாகத் தீர்மானிக்கப்படவில்லை.

"ஸைபுல் இஸ்லாம்"

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

### மஹா சந்த்ரஜோதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்த்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்துகொண்டே யிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0

12 அவு. பாட்டல் ரூ. 2—2—0

வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

### சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,

சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,

தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப்பள்ளி.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

### மஹாசந்த்ரஜோதித் தைலம்.

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

வெய்யில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம்மகா சந்த்ரஜோதித் தைலத்தை அரசர்களும், ஆங்கில மருத்துவர்களும், ஹைகோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் அன்று அநுபவித்து நற்நுணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் கனமதிப் பிரதியில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0

12-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 2—4—0

6-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1—3—0

தமிழ் மருத்துவ சாலை,

220 தங்கசாலைத் தெரு, சென்னை


## குடி அரசு பத்திரிகை.

கிடைக்குமிடம்:—

ரயில்வே பிளாட்பாரங்களிலுள்ள எக்கின்பாதம்ஸ்பெனி புஸ்தக சாலைகளிலும்

கோயமுத்தூர்—ஸ்ரீ எ. ஆர். சிவானந்த முதலியார்.

சேலம்—ஸ்ரீ ராமாநுஜ புக்டிபோ

திருப்பூர்—ஸ்ரீ குரு. ராமலிங்கம் செட்டியார். மண்டி

திருச்சி—ஸ்ரீ எஸ். மாசிலாமணி பிள்ளை, திருச்சிக்கோட்டை.

கும்பகோணம்—ஸ்ரீ கா. கு. நீலமேகம் பிள்ளை, சுருட்டு வியாபாரம், பெரியகடைத்தெருவு.

திருவாரூர்—ஸ்ரீ வி. எஸ். ராமன், தேசாபிமான சங்கம்.

நாகபட்டணம்—ஸ்ரீ என். பி. காளியப்ப தேவர் நெ. 3242. கொல்லுபட்டரை

மதுரை—நியூஸ் ஏஜண்டு, சுவினிங் பஜார்,

விருதுபட்டி—ஸ்ரீ பி. பழனிக்குமார பிள்ளை.

மதராஸ்—நியூஸ் ஏஜண்டு, நெ. 27. எரபாலு செட்டி வீதி.

கோலார்—ஸ்ரீ ப. மு. ராஜரத்தினம் சித்தார்த்த. புஸ்தகசாலை சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்டு.

தூத்துக்குடி—நியூஸ் ஏஜண்டு.

ராச்சியார்புரம்:— ஸ்ரீ ந. மெ. தியாகராஜா.

கொழும்பு:— ஸ்ரீ பி. பி. டே. மாணிக்கவாசகம், நெ. 52. செட்டி தெருவு.

ஈப்போ—ஸ்ரீ எம். என். பிள்ளை C/o போர்கியோ மோட்டார் (லிமிடெட்.)

சிங்கப்பூர்—பிரிட்டிஷ் அண்டு அமெரிக்கன் நியூஸ் ஏஜன்சி நெ. 6 பேட்டரி ரோட்

மற்ற ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.


### சமத்துவ ஊழியன்.

ஓர் சிறந்த தேசியத் தமிழ் மாதப் பத்திரிகை

அதிகாரமும், அகங்காரமும், பணத்திமிரும், ஜாதி இருமாப்பும் படைத்தாள்பவர்களின் அக்கிரமங்களைக் கண்டித்துத் திருத்திப் பாரத உலகத்திலே சமத்துவத்தை நிலைநாட்டுவான் வெளிநாட்டு போராடுவதற்கென, அக்ஷய-௵ சித்திரை-மீ 1-ந். யிலிருந்து வெளிவருவது; ஒவ்வொரு தமிழ் மக்களாலும் ஆதரித்துப் போற்றத்தக்கது.

வருட சந்தா தபாற்செலவுடன் ரூ. 2.

வீ. அருணாசலம்,

நெ. 52. செட்டித் தெரு, கொளும்பு.



## தமிழ் மக்களே!

அரசியல் வாணிபம் கைத்தொழில் முதலியவற்றில் நீங்கள் முன்னேறுதற்கென இருபெரும் எதிர்ப்புக்கிடையே நின்று அல்லும் பகலும் இடை அறுது உழைத்துவரும் தினசரிப் பத்திரிகை "திராவிடன்" ஒன்றேயாகும். பார்ப்பனர்களின் கட்சியான சுயராஜ்யக் கட்சியாரின் நயவஞ்சகச் சுபமிரசாரத்தை நைர்யமாய் விளக்கிக் காட்டி மிக்க ஆர்வத்துடன் அவைகளை எதிர்த்துவரும் தினசரியும் இந்த "திராவிடன்" ஒன்றே. ஆதலால் அதை வாங்கிப் படித்து உண்மை தெளிவீர்களாக. மாத சந்தா ரூபாய் ஒன்று தான். உடனே சந்தாதாராய்ச் சேருங்கள்.

மானேஜர், "திராவிடன்" ஆபீஸ்,

மவுண்ட் ரோட்,

சென்னை.



## இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்

| | | |
|---|---|---|
| காப்பு திரவியம் | ரூ. | 2,706. |
| மூல திரவியம் | ரூ. | 5,00,000. |
| வெளிவிடப்பட்டது | ரூ. | 69,100. |
| வசூலிக்கப்பட்டது | ரூ. | 43,890. |
| டிபாசிட்டுகள் | ரூ. | 62,580-1-0. |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு

இரண்டு வருஷ, கெடுவு வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.

ஒரு வருஷ கெடுவு, வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0

வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறை யாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எல்லையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளிலேயும் மானேஜிங், டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாள்துவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பது விருத்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாசிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய டைத்திற்கு யாதொரு கஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி ராமச்சந்திர செட்டி,

31—5—26. மானேஜிங் டைரக்டர்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.